Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-24 | 08-01-2005 | சனிக்கிழமை | ஓசை -325


கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி,
வவுனியா.
T.P.-024-2222464
இல:194. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11118)

# சர்வதேச சமூகம் உதவுவதற்கு இடையூறுகள் செய்தல் கூடாது!

## அரசிடம் எமது வேண்டுகோள் இதுவே
## பி.பி.சி.பேட்டியில் தமிழ்ச்செல்வன்

**கடல் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு மனிதாபிமான நெருக்கடியைச் சந்தித்து நிற்கின்ற மக்களுக்கு நேரடியாக உதவ சர்வதேச சமூகத்திற்கு வழிவகைகள் செய்யவேண்டும்; இதற்கு அரசாங்கம் எந்தவித இடையூறும் ஏற்படுத்தாது இருக்கவேண்டும் என்பதே எங்களுடைய அவசரமான மனிதாபிமான வேண்டுகோள். இதனை நிச்சயமாக சிறிலங்கா அரசாங்கம் கவனத்தில் கொள்ளவேண்டும். சர்வதேச சமூகம் எங்களுக்கு அனுசரணை வழங்கவேண்டும் என்பதே எங்களுடைய வேண்டுகோள். இவ்வாறு லண்டன் பி.பி.சி.யின் வவுனியா செய்தியாளருக்கு வழங்கிய செவ்வியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

இதன்போது சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான நிவாரணப் பணிகளைச் செய்வதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்துவதற்கு சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் தீர்மானம் குறித்து தமிழ்ச்செல்வன் அவர்களிடம் கேட்ட போது,

இது பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக எங்களுடைய கிழக்குப் பிராந்தியத்திலேதான் மிகவும் நெருக்கடி ஏற்பட்டிருக்கின்றது.

பாராளுமன்ற உறுப்பினர்கள், மதத்தலைவர்கள் போன்றோரால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடகிழக்கிற்கு விஜயம் செய்ய கொபி அனானுக்கு பல்வேறு அமைப்புக்கள் கோரிக்கை

வடக்குக் கிழக்கு மாகாண வெகுசன அமைப்புக்கள், தேவாலயங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ள சுனாமியாற் பாதிப்படைந்த பகுதிகளிற்கு விஜயத்தை மேற்கொள்ளக் கோரி ஐ.நா செயலாளருக்கு முறையிட்டுள்ளனர். யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியமும் இவ்வாறான அழைப்பை விடுத்துள்ளனர். யாழ். மாவட்ட மறை ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம், திருகோணமலை. மட்டக் களப்பு மறை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, மன்னார் மாவட்ட மறைஆயர் இராயப்புயோசப் ஆகியோர் ஐ.நா செயலாளர் கொபி அனானை முல்லைத்தீவிற்கு விஜயத்தை மேற்கொண்டு விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் எதிர்கால மீள் குடியமர்வு தொடர்பாக அவர்களுடன் கலந்தாலோசிக்கும்படி கேட்டுள்ளனர். கூடுதலான கோரிக்கைகள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அ[illegible]ன் வருகையை முக்கியப்படுத்துவதாக உள்ளது.

## கனேடியப் பிரதமர் பௌல்மார்டின் இம்மாத இறுதியில் இல.விஜயம்



கனேடியப் பிரதமர் பௌல் மார்டின் இந்த மாத இறுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்யவுள்ளதாக கனேடியப்பிரதமர் அலுவலகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார். கனடா சுனாமி பேரலை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான நிவாரண உதவிகளை இரட்டிப்பாக்கி

(12ஆம் பக்கம் பார்க்க)


## விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொபிஅனான் செல்வதைத் தடுக்க தீவிர மு'''ற்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கொபிஅனான் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதைத் தடைசெய்யவும், தமிழர் தாயகப்பிரதேசத்தில் ஏற்பட்ட பேரழிவை இருட்டடிப்புச் செய்யும் வகையில் அவரது நிகழ்ச்சி நிரல் அமையும் வகையில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு சந்திப்புக்களை நடத்துவது விடுதலைப் புலிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் அங்கீகாரமாக அமைந்து விடும் என இலங்கையின் அதிகார வர்க்கம் கருதுவதாகவும்,

(12ஆம் பக்கம் பார்க்க)



ஐ.நா.பொதுச் செயலாளர்கொபி அனான் அவர்கள் நேற்றுமாலை கொழும்பு வந்தடைந்தபோது...

## யாழ். நலன்புரி நிலையங்களிலிருந்தும் பொலிசாரின் வருகையை அடுத்து மக்கள் வெளியேற்றம்

வடமராட்சிப் பகுதியில் சுனாமி கடற்கொந்தளிப்பினால் இடம் பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள முகாம் பகுதிகளில் இலங்கைப் பொலிசார் க[illegible]டமையில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து முகாம்களை விட்டு வெளியேறியுள்ளனர். எனினும் முகாம்களுக்கு வெளியே நிராயுத பாணியாக பாதுகாப்புக் க[illegible]டமை யில் தாங்கள் ஈடுபடுவதாக பொலிசார் வழங்கிய உறுதிமொழியினை அடுத்து அங்கு சுமூகநிலை ஏற்பட்டுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.படைகள் புலிகளின் நடவடிக்கையில் எந்த விதத்திலும் தலையிட மாட்டாது

### - அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல்

அமெரிக்கப்படைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் நடவடிக்கையில் எந்த விதத்திலும் தலையிடமாட்டாது, அதே நேரம் அவர்களுக்கு எதிரான எந்தவிதமான இராணுவ நடவடிக்கையிலும் ஈடுபடாது. இதனை மிகவும் அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன் என்று இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல் அறிவித்துள்ளார். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் பத்திரிகையாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)



## கடற்தொழில் இன்று முதல் ஆரம்பம் கடலுணவுகளையும் உண்ணலாம்

(அலுவலக செய்தியாளர்)

கடலுணவுகளை மக்கள் உண்ணலாம் என்றும், இன்று முதல் மீன்பிடித் தொழிலில் மக்கள் ஈடுபடலாம் என்றும் நேற்றைய திட்டமிடல் கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட கடலனர்த்தத்தால் கடலில் மீன்பிடித் தொழில் மேற்கொள்வது நிறுத்தப்பட்டிருந்தது. அதனால் கடலுணவுகள் தடைப்பட்டிருந்தன. இன்று முதல்

(12ஆம் பக்கம் பார்க்க)



பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில்...

## முல்லைத்தீவை மீளக் கட்டியெழுப்பும் அடிப்படைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடல்

(அலுவலகசெய்தியாளர்)

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான அடிப்படைத் திட்டங்களை மேற்கொள்ளும் கலந்துரையாடல் ஒன்று முல்லைத்தீவில் நடைபெற்றுள்ளது.

நேற்று மாலை 3.00 மணியளவில் தமிழீழ கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்து ரையாடலில் முல்லைத தீவு நகரப் பகுதியை மீண்டும் கட்டியெழுப்பத தேவைப்படும் அடிப்படைத் தேவைகள் என்ன? அவற்றை எவ்வாறு மேற்கொள்வது? என்ற அடிப்படையில் தேசியத்தலைவரின பணிப் பிற்கிணங்க ஒரு புலமைசாா நிபு ணர்களைக்கொண்டு தாயகப் பகுதியைக் கட்டியெழுப்ப ஒரு திட்டமிடலைச் செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு பல்கலைக்கழகம், தென்னிலங்கைப் பல்கலைக்கழகம் எமது வெளிநாட்டைச் சேர்ந்த புத்திஜீவிகளையும் அழைத்து எவ்வாறு எமது தாயகததைக் உடனடியாகப் புனரமைப்புப் பணிகளைச் செய்வது என்ற ஆரம்பப்பணி தயாரிப்பு வேலைகளை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### காணவில்லை

சண்முகநாதன்-பிரணவன் (வயது-19) அரசாங்க விடுதி, கல்லடி, மட்டக்களப்பு என்ற முகவரியைச் சேர்ந்தவர் காணாமற் போய்விட்டார். இவரை திருமதி. கமலாசினி உதயசூரியன் (மட்டக் களப்பு) தேடுகிறார். இவரைக் கண்ட வர்கள் 065-2225250, 077-6550345, 077-6550100, 065-2247081 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும். (5090)

### தவறிவிட்டது

வட்டக்கச்சி நாவலர் வீதிப் பகுதி யில் வசிக்கும் இராமநாதன் பத்மரூ பன் அவரது அடையாள அட்டை யும் (இல. 833344994V)பயண அனுமதிப்பத்திரம் மற்றும் சில ஆவ ணங்கள் அடங்கிய பயணப்பை கிளி நொச்சி மக்கள் வங்கிக் கிளைக்கு முன்பாக தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை யில் அல்லது மக்கள் வங்கிக் கிளை யில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுள்ளார். (5463)

## வீதிவிபத்து ஒருவர் காயம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி-புளியம்பொக்கணை வீதியில் உந்துருளி-ஈருருளி விபத்தில ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இச் சம்பவம் கடந்த புதன் கிழமை காலை 8 மணியளவில் பெரிய குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஈருருளியில் பயணித்த வயோதி பரான பரமானந்தம்-சிவக்கொழுந்து (வயது-64) என்பவரே சம்பவத்தில் காயமடைந்துள்ளார். (15)

## அவசர ஒன்றுகூடல்

அனைத்து கலைப்பீட முகாமை கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்களை யும் , யாழ்.பல்கலைக் கழக மாண வர் பொது அறையில் அவசர கலந் துரையாடல் ஒன்று இன்றுகாலை 9.00 மணிக்கு இடம் பெறவுள்ள தால் ஒன்றுகூடுமாறும் யாழ்பல்கலைக கழக மாணவர் ஒன்றியத் தலைவ ரால் அழைக்கப்படுகின்றனர். (36)

## உமாசாகி மோட்டார்சைக்கிள் பாவனையாளர்களுக்கு முக்கிய அறிவித்தல்

உமாசாகி மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் தங்களது உமாசாகி மோட்டார் சைக்கிள்களை 10.01.2005இல்சிவகுருகட்டடப் பொருள் உந்துருளி வாணிபமாகிய பரந்தனுக்குக் கொண்டுவரும்படியும் அன்று தங்களது பெயரை பதிவுசெய்து இங்கு நடைபெறும் இலவச சேவையினைப் பெற்றுக்கொள்ளுமாறு செந்.அந்தனில் உந்துருளி வாணிபப் பிரிவினர் வேண்டிக்கொள்கின்றனர். இலவச பராமரிப்புக் காலத்தில் உதிரிப்பாகங்கள் பழுதடைந்து இருப்பின் அவைகள் இலவசமாக வழங்கப்படும். இலவச சேவை நடைபெறும் நாள் 11.01.2005 தொடக்கம் 12.01.2005 வரை நடைபெறும்.




(சி-11125)




(சி-11065)

## சாவு அறிவித்தல்

வண்ணான் குளம் முல்லைத்தீவில் வசித்து வந்த ஒரே குடும்பத்தைச்சேர்ந்த:

**திருமதி. தம்பையா பாக்கியலட்சுமி** (அதிபர் த.பங்கயச்செல்வனின் தாயார்)

**திருமதி. புலேந்திரராசா வள்ளிகாந்தா** (தட்டெழுத்தாளர், முல்லைத்தீவு, கச்சேரி, பன்னகாபரணன் (த.பங்கயச்செல்வன் அதிபர், அன்னலட்சுமி (சிறீஸ்கந்தராசா ஆகியோரின் சகோதரி)

**திருமதி. பரிமேலழகன் கவிதா** (நெடுங்கேணியைச் சேர்ந்த மா.தெய்வேந்திரன், (மா.உதயகுமார் (TRO) ஆகியோரின் சகோதரியும், த.பன்னகாபரணன், த.பங்கயச்செல்வன் ஆகியோரின் மைத்துனியும்)

**வள்ளிகாந்தாவின் மகன் பிரவின்**

**கவிதாவின் மகள் தரணி**

ஆகியோர் 26.12.2004 அன்று ஏற்பட்ட கடல் அனர்த்தத்தில் அகாலமரணமடைந்துள்ளனர்.

திருமதி. பு.வள்ளிகாந்தாவின் மரணக் கிரியைகள் ஆசிரியர்விடுதி ஒட்டுசுட்டான் ம.வியில் 02.01.2005இல் நடைபெற்று உடல் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:

த.பங்கயச்செல்வன், த.பன்னகாபரணன்,
மா.உதயகுமார், திருமதி அன்னலட்சுமி சிறீஸ்கந்தராசா

(5465)

# இடிபாடுகள் அகற்றும் பணி தொடர்கிறது
# சுமாத்திராவில் நேற்றும் 4,000 சடலங்கள் மீட்பு!



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவில் நேற்றைய தினம் சுமார் நான்காயிரம் சடலங்கள் மீட்கப்பட்டன.

சுனாமியால் மிகமோசமாக பாதிக்கப்பட்டுள்ள இந்தோனேசியாவில் கட்டட இடிபாடுகளை அகற்றும் பணி இடம் பெற்று வருகிறது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட மீட்புப்பணி நடவடிக்கைகளில் இடிபாடுகளை அகற்றும் போது நான்காயிரம் சடலங்கள் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமாத்திரா தீவிற்கு நேற்றைய தினம் விஜயம் செய்துள்ள ஐ.நா.பொதுச் செயலாளர் கொபி அனான் மற்றும் உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ்வுல்பன்சன் ஆகியோர் இச்சடலங்கள் மீட்கப்படுவதையும் இடிபாடுகள் அகற்றப்படுவதையும் பார்வையிட்டனர்.

# சுனாமி பாதித்த நாடுகளின் கடன்கள் ஜப்பானால் ரத்து

கடந்த 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரலைகளால் இந்தோனேசியா உட்பட 13 நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. சுமார் 2 இலட்சம் பேர் இதில் உயிர் இழந்துள்ளனர். சுனாமி பாதித்த நாடுகளுக்கு உதவுவது பற்றி ஆலோசிக்க உலகத் தலைவர்கள் மாநாடு இந்தோனேசியாவின் ஜகார்த்தா நகரில் நடந்தது.

இதில் கலந்து கொண்டு பேசிய ஜப்பான் பிரதமர் ஜூனிச்சரோ கொய்சூமி பேசும் போது, சுனாமி பாதித்த நாடுகளுக்கு ஜப்பான் தனது கடன் வசூலை ரத்துச் செய்வதாக தெரிவித்தார். மற்ற நாடுகளும் இதே போல் கடன் வசூலை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். இந்தோனேசியாவுக்கு ஜப்பான் கடந்த ஆண்டு வரை 5600 கோடி டொலர் கடன் வழங்கி உள்ளது.

## வருடாந்த விழா

(ஜெகனர்ஸ்பேர்க்)

தென்னாபிரிக்காவில் அடிமைத்தனம் 1830 ஆம் ஆண்டு ஒழிக்கப்பட்டது. அடிமைகள் விற்பனை ஒழிக்கப்பட்டதை ஆண்டு தோறும் அந்த நாட்டு மக்கள் கோலாகலமாக கொண்டாடி வருகிறார்கள். கேப்டவுனில் இதையொட்டி பிரமாண்ட பேரணியும் ஆண்டு தோறும் நடந்து வருகிறது. கேப்டவுனில் நடந்த திருவிழாவில் ஆபிரிக்க மக்கள் மற்றும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் தங்கள் உடலில் வண்ணக் கலவைகளைப் பூசிக் கொண்டும், குடைகளை கையில் வைத்துக் கொண்டு ஆடிப்பாடியும் பேரணியில்கலந்து கொண்டனர்.

# சுனாமி நிவாரணப் பணிக்கு நன்கொடை அறிவித்த நாடுகள் விரைவில் நிதி தர முன்வர வேண்டும்

## -ஐ.நா.பொதுச்செயலர் வேண்டுகை

(ஜகார்த்தா)

**சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் நிவாரண ஊழியர்கள் காலத்தோடு போராடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, நன்கொடை அறிவித்த நாடுகள் விரைவில் அதற்கான நிதியைத் தரவேண்டும் என்று ஐ.நா. பொதுச்செயலாளர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்தார்.**

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பாக இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நேற்று முன்தினம் அவசர உச்சிமாநாடு நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு பேசுகையில் அனான் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார். அவர் பேசியதாவது,

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதில் நிவாரண ஊழியர்கள் கால அவகாசத்தோடு போட்டிபோட்டுக் கொண்டு பணியாற்றி வருகிறார்கள். எனவே உலக நாடுகள் தாங்கள் அறிவித்த படி உதவித் தொகையை விரைவிலேயே தர வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 800 கோடி டொலர் அளவுக்கு உதவித்தொகை தருவதாகப் பல நாடுகளும் அறிவித்துள்ளன. இதில் சில வாக்குறுதிகள் நிறைவேறாமல் போய் விடக்கூடும். சுனாமியால் ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் 1 இலட்சத்து 50 ஆயிரம் பேர் பலியாகிவிட்டனர். ஆயினும் உண்மையில் எவ்வளவு பேர் பலியானார்கள் என்பது தெரியவில்லை.

உயிர் பிழைத்தவர்களுக்கு உரிய நேரத்தில் நிவாரணம் கிடைக்கவில்லையானால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் ஆபத்து இருப்பதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. பல சமூகங்கள் அழிந்து விட்டன. இந்தியப் பெருங்கடலில் சுனாமி எச்சரிக்கை முறையை நிறுவ வேண்டியது மிகவும் அவசியமானதாகும்.

ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் தொலை தூர நாடுகளிலும் கூட கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு துன்பதுயரங்களை, மனப்புண்களை அனுபவித்து வருகிறார்கள். இந்த மனங்கள் ஆறுவதற்கு நீண்ட காலம் பிடிக்கும். சுனாமி பேரழிவு என்பது மிகவும் கொடூரமானதாக உள்ளது. இந்தப் பேரழிவு மிகத் துரிதமாக ஏற்பட்டுள்ளது. நீண்ட விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. இதை ஜீரணிக்கவே நாம் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம். எனவே நன்கொடை அறிவித்த நாடுகள் விரைவில் அவற்றை ரொக்கமாக வழங்க வேண்டும். இது கால அவகாசத்தோடு போராடும் விஷயமாகும். இவ்வாறு அவர் கூறினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக நடந்த உலகத் தலைவர்களின் உச்சி மாநாட்டில் 26 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டில் பேசிய இந்தோனேசிய சனாதிபதி சுசிலோ பாம்பாங், யுதோயோனோ பேசுகையில், "சுனாமி எச்சரிக்கைக் கருவி, பசுபிக் பெருங்கடலுக்காக அமைக்கப்பட்டு இருப்பது போல, இந்தியப் பெருங்கடலுக்கு என்று தனியாக ஒரு கருவி பொருத்தப் படவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

அவர் மேலும் கூறுகையில் "நான் எத்தனையோ புயல் சீரழிவுகளையும், போர்களையும் பார்த்து இருக்கிறேன். ஆனால் இதுபோன்ற பேரழிவை நான் பார்த்ததே இல்லை" என்று குறிப்பிட்டார்.



தென் ஆசிய நாடுகளில் ஏற்பட்ட ஆழிப் பேரலை அனர்த்த[illegible]ில் பலியானவர்களுக்காக லண்டன் வாட்டர் லூ ரயில் நிலையத்தில் 3ந[illegible]ம் மௌன அஞ்சலி செலுத்தப்படுகிறது.

# சீன மக்கள் தொகை 130 கோடியை எட்டியது!

(பெய்ஜிங்)

சீனாவின் பீஜிங் நகரில் உள்ள வைத்தியசாலையில் நேற்று முன் தினம் பகல் 12 மணி அளவில் ஒரு குழந்தை பிறந்தது. இந்தக் குழந்தை பிறந்ததை அடுத்து சீனாவின் மக்கள் தொகை 130 கோடியைத் தொட்டது. சீன அரசும் அதிகார பூர்வமாக இதை அறிவித்துள்ளது.

சீனாவின் 130 ஆவது கோடி குடிமகனாக என் மகன் பிறந்தது குறித்து மகிழ்ச்சி என்று அதன் தந்தை ஜாங்டாங் கூறியிருக்கிறார். கடந்த 30 ஆண்டுகளாக சீனா மக்கள் தொகைப் பெருக்கத்தை கட்டுப்படுத்தக் கடுமையாகப் போராடி வருகிறது.



சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த இந்தோனேசிய ஆசே மாநில அகதிகள் நிவாரண உதவிபெற வரிசையில் காத்து நிற்கின்றனர்.

# சுனாமியால் பாதிப்புற்ற நாடுகளுக்கு ஐ.நா.சபையின்கீழ் உதவியளிக்கப்படும்

## -அமெரிக்கா திடீர் அறிவிப்பு

(வோஷிங்டன்)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அமைக்கப்பட்ட கூட்டுக்குழு கலைக்கப்பட்டு விட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

கடந்த 26ஆம் திகதி சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவவும் நிவாரண நடவடிக்கைகளை விரைவுபடுத்தவும் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகள் ஒரு கூட்டுக் குழுவை அமைத்தது.

இந்தக்குழு கலைக்கப்பட்டு விட்டதாக அமெரிக்கா திடீரென்று அறிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் சர்வதேச மாநாட்டின் போது அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொலின் பவல் தெரிவித்தார். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் விரிவான முறையில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கொலின் பவல் தெரிவித்தார்.

# வடகொரியா பயணம்

(சியோல்)

தென்கொரியாவின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் காங்கிரஸ் குழுக்களின் தலைமையில் இன்று வடகொரியாவிற்கு செல்கின்றார். இந்த விஜயத்தின் போது அணுவாயுதப் பிரச்சினைகள் மனித உரிமைகள் போன்றவை பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுவதாக சியோலின் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை சனநாயகப் பிரதிநிதியான ஹொங்லங்டோவ் பாராளுமன்ற உறுப்பினர்களடங்கிய மற்றுமொரு குழுவினருடன் 4 நாள் விஜயத்தை மேற்கொண்டு வடகொரியா செல்லவுள்ளார். இவர் வடகொரியாவின் அணுவாயுதத்திட்டத்தை கைவிடுவது பற்றிய பேச்சுக்களில் கலந்துகொள்ளவுள்ளதாக தென்கொரிய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர்கள் வடகொரியாவிற்கு செல்வதை அமெரிக்க வெள்ளை மாளிகை தடைசெய்திருந்த போதிலும் தற்போது இதற்கு இணங்கியுள்ளது.


# வடமராட்சி கிழக்கில் தொற்று நோய்பரவாது தடுப்பதில் சுகாதார சேவையினர், போராளிகள் தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

**கடற் பூகம்பத்தினால் உருவான சுனாமிப் பேரலைகளால் துடைத்தழிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பிரதேச கிராமங்களில் தொற்றுநோய்கள் ஏற்படாது தடுக்கும் பணிகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் DR.T.சத்தியமூர்த்தி அவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி, வவுனியா, யாழ். மாவட்ட மலேரியா தடை இயக்கப் பகுதியினர் 65 பேரும் யாழ் மாவட்ட பொதுச் சுகாதாரப்பரிசோதகர்கள் மூவரும் போராளிகளுடன் இணைந்து இப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கிணறுகளுக்குக் குளோரின் இட்டு கடல்அலைகளாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டநீரைப் பாவனைக்கு உரிய நிலைக்குக் கொண்டு வருதலும், நூற்றுக் காணக்கானோர் பலியாகி உடல்கள் பல நாட்களின் பின் மீட்கப்பட்டஇடங்களில் லைசோல் விசுறுவதன் மூலம் தொற்று நோய்கள் ஏற்படாது தடுப்பதும் இப்பணிகளின் நோக்கமாகும். இச்சுகாதார வேலைகளில் ஈடுபட்டவர்களுக்கான உணவு தங்குமிட வசதிகள் தமிழீழ சுகாதார சேவைகள், தமிழீழ மாணவர் அமைப்பு என்பன ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சோ)



முல்லை நகர மீட்புப் பணியின் 2ஆவது கட்ட செயற்பாடுகளில் விடுதலைப்புலிகள் தீவிரம். (படம்- சசி)

-சிங்களப்படையால் சுட்டுக் கொல்லப்பட்ட-

# அருட்தந்தை மேரிபஸ்தியரின் 20ஆவது ஆண்டு நினைவு தினம் மன்னாரில் அனுஷ்டிப்பு

(மன்னார்)

மன்னார் வங்காலை தேவாலயத்தில் வைத்து சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட அமரர் அருட்தந்தை மேரிபஸ்தியரின் 20 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்று முன்தினம் மன்னாரில் அனுஷ்டிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 7.00 மணிக்கு மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தலைமையில் பல குருக்கள் கலந்து கொண்ட கூட்டு இரங்கல் திருப்பலி வங்காலை தேவாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதேவேளை அன்றைய தினத்தை மன்னார் மக்கள் துக்கதினமாகவும்அனுஷ்டித்தனர். 1984 ஆம் ஆண்டு தைமாதம் ஆறாம் திகதி அருட்தந்தை தேவாலயத்தில் தமது அறையில் இருந்த வேளை அங்கு வந்த சிங்களக் காட்டுமிராண்டிப் படைகளால் அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டது தெரிந்ததே. (18)

# திருமலைக்கு விஜயம் செய்த டென்மார்க் தூதுவர் 10 நீர்சுத்திகரிப்பு இயந்திரங்களை வழங்கினார்

இலங்கை, இந்திய நாடுகளுக்கான டென்மார்க் தூதுவர் மைக்கல் ஸ்டோன் பேக் நேற்றுமுன்தினம் திருகோணமலைக்கு விஜயம் செய்தார். இவருடன் தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட 14 பேரடங்கிய குழுவினரும் திருகோணமலைக்கு விஜயம் செய்தனர்.அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனை சந்தித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்கு நிவாரண உதவிகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்துகொண்டனர் இதனையடுத்து அவர் 10 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களைக் கையளித்து அவற்றை தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## விரிவுரைகள்

விவசாய பீடத்துக்கு 2004/2005 ஆம் கல்வியாண்டுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள புதிய மாணவர்களுக்கும் மற்றும் இரண்டாம், மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்குமான முதலாம் அரையாண்டு விரிவுரைகள் அடுத்த மாதம் 07ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு புதிய மாணவர்களுக்கான அறிமுக வைபவம் நடைபெறவுள்ளது.

ஏற்கனவே பதிவு செய்தவர்களைத்தவிர புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்கள் தங்கள் பதிவுகளை பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

### 17ஆம் திகதி ஆரம்பிக்கும்

பனை,தென்னை வள சான்றிதழ் கற்கைநெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர் வரும் 17ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இடைநிறுத்தப்பட்ட அனைத்துப் பரீட்சைகளும் இந்நாள் முதல் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

# தென்பகுதியில் தொற்றுநோய் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிப்பு

நாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தைத் தொடர்ந்து தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. அடிப்படை சுகாதார வசதிகள் அற்ற நலன்புரிநிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்கள் தொற்று நோய் தாக்கத்திற்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர். வயிற்றோட்டம், தொண்டை நோவு, காய்ச்சல் போன்ற நோய்கள் தற்போது பல இடங்களிலும் பரவி வருவதாகவும் இந்த விடயம் தொடர்பில் உரிய கவனம் எடுக்கப்பட வேண்டும் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

தொற்று நோய்கள் ஏற்பட்டுள்ளமை அறியப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்குச் சென்று உரிய சிகிச்சையினை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்கப்பட்டுள்ளனர் (32)



நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்களின் மனநலம் பாதிக்கப்படாதிருப்பதற்காக பொழுதுபோக்கு செயற்பாடுகளை செயலணிக்குழு மேற்கொண்டுவருகின்றது. (படம் சசி)



நீர்கொழும்பு இந்து இளைஞர் பேரவையினர் முல்லைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பொருள் வழங்குகின்றனர்.

# பொருண்மிய மதியுரையகத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

பொருண்மிய மதியுரையகத்தால் பிரான்ஸ் TECH இன் நிதியுதவியுடன் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த வடபகுதி மக்களுக்கு 1.5 மில்லியன் ரூபா(15இலட்சம் ரூபா) பெறுமதியான பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

# மன்னார் அரசியல்துறையினரும், மக்களும் அம்பாறை, முல்லைக்கு நிவாரணம் அனுப்பி வைப்பு

(மன்னார்)

அண்மையில்இடம் பெற்ற பாரிய வெள்ளப்பாதிப்புக் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் நலன் கருதி மன்னார் அரசியல் துறையினர் ஓர் தொகுதி பொருட்களைப் பாரவூர்தியில் ஏற்றிக் கொண்டு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டத்திற்குச் சென்றுள்ளனர்.

இவற்றில் மருந்துப் பொருட்கள் ஆடைகள், உணவுப் பொருட் கள் என்பன அடங்கும். இதே போல மன்னார் துயர்துடைப்பு சங்கத்தினரும் 5இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை வவுனியாவில் இருந்து முல்லைத்தீவுப் பகுதிக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதில் பெண்களிற்கான ஆடைகள், குழந்தைகளிற்கான பால்மா வகைகள், உணவுப் பொருட்கள் என்பன அடங்கும். (18)

# தற்காலிக கொட்டகைகளில் முல்லை மக்கள் குடியமர்த்தப்பட்டதும் பாடசாலைகள் ஆரம்பிக்கும்

-வலயக் கல்விப் பணிப்பாளர்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவில் சுனாமி பேரலைத் தாக்கத்திற்குள்ளாகி நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்களை தற்காலிக கொட்டகைகள் அமைத்து குடியமர்த்தப்பட்ட நாள் தொடக்கம் முல்லைத்தீவு பாடசாலையும் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தெரிவிக்கப்படுகிறது.

மக்களை நலன்புரி நிலையங்களிலிருந்து தற்காலிக கொட்டகைகள் அமைத்து குடியமர்த்த இன்று தொடக்கம் 14 நாட்கள் காலவரையறை விதிக்கப்பட்டுள்ள நிலையில், முல்லைத்தீவு மகாவித்தியாலயம் அமைந்துள்ள அதே இடத்தில் மீண்டும் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு, கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதேவேளை முற்றாக அழிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு சீருடை மற்றும் கற்றல் உபகரணம் என்பன முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளதாகவும், அச்சம் காரணமாக இடம் பெயர்ந்து நகரை அண்டியபகுதியில் வசிக்கும் மாணவர்களுக்கு இரண்டாவது கட்டமாக இவை வழங்கப்படுமெனவும் முல்லைவலயக் கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா அவர்கள் தெரிவித்துள்ளார். இச்செயற்பாட்டுக்கு யுனிசெப் நிறுவனத்தினர் உதவி வழங்கவுள்ளதாகவும் அவர் கூறினார். இதனிடையே முல்லைத்தீவு மகாவித்தியாலயம் அமைந்துள்ள பகுதியை அண்டிய பகுதியில் மீண்டுமொரு கடல் அலையின் தாக்கம் ஏற்படாதவாறு மண்அரண்கள் அமைத்து பாதுகாக்கவும் உடனடி நடவடிக்கை எடுப்பதாக கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை அவர்கள் தெரிவித்துள்ளார். இதேவேளை சுனாமி அலைத்தாக்கத்தால் முல்லைத்தீவு மகாவித்தியாலய கட்டடங்கள், தளபாடங்கள் என்பன முற்றாக அழிவடைந்துள்ளமையும், குறிப்பிடத்தக்கது. (ச)

# பாதிப்புற்ற மக்களை நம்பிக்கை கொள்ள வைக்கும் 'அவலநீக்க ஆற்றுப்படையரங்க' செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் தாக்கப்பட்ட மக்களுக்கான 'அவலநீக்க ஆற்றுப்படையரங்க' செயற்பாட்டின் தொடராக 04-01-2005 இல் யாழ் கல்வி வலய ஆசிரியர் யாழ்/வட இந்து மகளிர் கல்லூரியிலும் கல்வியற் கல்லூரி மாணவர்கள், யாழ்/அல்வாய் சிறிலங்கா வித்தியாலயத்திலும் யாழ் பல்கலைக்கழக தெருவெளி அரங்கக் குழு, அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து ஆற்றுப்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

அவர்களுடனான அரங்காடலில் தமது துன்பங்களைப் பகிர்ந்து ஆறி வருகின்ற மக்கள் தமது எதிர் காலம் பற்றிய கதையாடல்களிலும் ஈடுபடுகின்றனர். முக்கியமாக தமது பிள்ளைகளின் கல்வி பற்றி ஆர்வமாக உரையாடுகின்றனர்.

இந்த செயற்பாடுகளில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தமது அனுபவங்களினூடாக பல கருத்துக்களை கல்விச் சமூகத்திற்கு முன்வைத்துள்ளார்கள். ஆசிரியர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பவர்களை அணுகிய போது "நீங்கள் எங்களைத் தேடி அதுவும் யாழ்ப்பாணத்திலிருந்து வந்தது எங்களுக்கு சந்தோசத்தைத் தருகிறது" என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். பிள்ளைகளுக்கு கற்பித்த ஆசிரியர்கள் தம்மை வந்து பார்க்கவேண்டும் என்ற எதிர்பார்ப்பு பிள்ளைகளிடமும் பெற்றோரிடமும் மிகுந்திருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அங்குள்ள மாணவர்களுக்கு பெற்றோர்களும் கல்விச் செயற்பாடுகள் தொடர்பாக மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. அதேவேளை இச்செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடையாக பல்வேறு பிரச்சினைகள் இருப்பதாக கருதுகின்றார்கள். பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்கள்,கொப்பிகள்,கற்றல் உபகரணங்கள், விளையாட்டு உபகரணங்கள் அனைத்தையுமே கடலில் பறிகொடுத்த இந்த நிலைமையில் தமக்கு அவற்றை வழங்கவேண்டுமென்று எதிர்பார்க்கின்றார்கள்.

பாடசாலையில் அனுமதிக்கும் போது வழமையாக நடைமுறையில் உள்ள கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட வேண்டுமென ஆசிரியர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். குறிப்பாக கணிப்பீடுகள், விடுகைப் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் போன்ற ஆவணங்கள், பாடசாலை சீருடை, சப்பாத்து, கற்றல் உபகரணம் போன்ற விடயங்களில் தளர்வாக இருப்பதன் மூலமே இவர்கள் தமது கல்வியைத் தொடர முடியும். ஆசிரியர், தளபாடம், புத்தகப் பற்றாக்குறை என காரணங்கள் காட்டி நிராகரிக்காது, எந்த ஒரு பிள்ளைக்குமே பாடசாலை அனுமதி கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும். உளவியல், பொருளாதார ரீதியாகத் தாக்கப்பட்டுள்ள இந்த மாணவர்கள் வகுப்புகளிலே விசேடமாக கவனிக்கப்பட வேண்டியதும் அவசியமாகும்.

"வழமை மாதிரி பிள்ளையை எல்லாத்தையும் கொண்டு வா என்று பள்ளிக்கூடம் நிண்டால் என்னால் பிள்ளையை படிக்கவிடேலாது" எனப் பல பெற்றோர்களின் ஆதங்கம் கல்வி அதிகாரிகளால் நிச்சயம் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

அந்தப் பிரதேசத்தின் எதிர்கால சந்ததியின் வாழ்வை வளப்படுத்துவதற்கு கல்விச் சமூகம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவலநீக்க ஆற்றுபடையரங்க செயற்பாடுகளில் புதிய ஆசிரியர்கள் இணைந்துள்ளார்கள். மேலும் ஆசிரியர்கள் இணைந்து செயற்பட வேண்டுமென அரங்க செயற்பாட்டுக் குழு அழைப்பு விடுத்துள்ளது.

துன்பக் கடலின் மத்தியிலும் நம்பிக்கைக் கீற்றுகளை பற்றிப்பிடிக்க அவர்கள் முயல்கிறார்கள். ஒரு சிறு வீட்டுடனும் ஒரு துண்டு வலையுடனும் தம் எதிர்காலத்தை மீளக்கட்டியமைக்க கற்பனையில் ஈடுபடுகின்றார்கள். ஆனால் அவர்கள் மீது விழும் சொல்லம்புகளும் கூடி வாழும் நெருக்கடியும் அவர்களை மனம் நோக வைக்கிறது. இது மேலும் அதிகரிக்குமாயின் எதிர்காலம் பற்றிய அவர்களின் கற்பனை ஆற்றலை மழுங்கடித்துவிடுமென நாம் அஞ்சுகின்றோம். கூடிவாழ்வை ஒழுங்கானதாகவும் இதமானதாகவும் ஆக்கி, அவர்கள் தம் எதிர்காலம் பற்றிய கற்பனைச் சிந்திப்பில் ஈடுபட வழிவகுக்க வேண்டியது அவசியமாகும். நாம் அனைவரும் இணைந்து அவர்களுக்கு அருகிருப்போ மென அரங்க செயற்பாட்டுக் குழுவின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

-சுனாமியால் பாதிக்கப்பட்டுள்ள-

# வடமராட்சி கடலோரக் கிராமங்களை புனரமைக்க அரசியல்துறை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**"சுனாமி கடற்பேரனர்த்தத்தால் சேதமடைந்து போயுள்ள யாழ்.வடமராட்சியின் கடலோரக் கிராமங்களைப் புனரமைக்கும் பணிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்டஅரசியல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.**

கடந்த 26ஆம் திகதி ஏற்பட்ட இக்கடல் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கிராமங்களைத் துரிதமாக மீளக்கட்டியெழுப்பும் முகமாகவே யாழ்.மாவட்ட அரசியல் துறையினர் இப்பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்புவதற்கான இப்பணிகளில் யாழ். மாவட்ட அரசியல் துறையினருடன் அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக தொண்டு அமைப்புக்கள் எனப் பலரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். (33)

# உயர் கல்வியைத் தொடர ச.த. மாணவர் பேரவை உதவி

*-பாதிப்புற்றோர் தொடர்புகொள்ள வேண்டுகோள்*

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் சீற்றத்தால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்து காயப்பட்டு அல்லலுறும் எம் இனிய மக்கள் அனைவருக்கும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக உயர் கல்வி நிறுவனங்கள், யாழ்.பல்கலைக்கழகம், உயர் தொழில்நுட்பக் கல்லூரி, கொக்குவில் தொழில்நுட்பக்கல்லூரி, கல்வியற்கல்லூரி, ஏனைய உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்களின்குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் தயவு கூர்ந்து எம்முடன் தொடர்பு கொண்டு தங்களுடைய கல்வித்தேவைகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பேரவையின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (36)

# பாடசாலை எரிப்பு தொடர்பாக ம.உ.ஆணைக்குழு விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியின் கரையோர பிரதேசங்களைத் தாக்கிய கடற்பேரனத்தங்களால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த நடுக்குடத்தனை மெதடிஸ்தமிஷன் பாடசாலை இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். இதுகுறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவினர்,படைத்தரப்பு, பாதிக்கப்பட்ட மக்கள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை மேற்படி பாடசாலையில் இருந்த அகதி முகாமை தீயிட்டவர்கள் சிறிலங்காப் படையினரே எனத்தெரிவிக்கும் பாதிக்கப்பட்ட மக்கள், பாடசாலை எரியூட்டப்படுவதற்கு முன்னர் சிறிலங்காப்படையினரின் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்தவர்கள் அங்கு தங்கியிருந்த மக்களை விரட்டியதாகவும் குறிப்பிட்டுள்ளனர்.(33)

# "சுனாமி கல்வி நிவாரணப்பணி" மூலம் கல்விசார் பொருட்கள் சேகரிப்பு

*மேலும் விரிவாக்கவும் திட்டம்*

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு கல்வியைத் தொடருவதற்கு உதவு முகமாக தமிழ் மாணவர் ஒன்றியத்தினால் கடந்த 31.12.2004 அன்று ஆரம்பிக்கப்பட்ட "சுனாமி கல்வி நிவாரணப்பணி" மூலமாக மாணவர்களிற்கான கல்வி உபகரணங்கள், சீருடைகள், சீருடைத்துணிகள் என்பன முழு வீச்சில் மாணவர் ஒன்றியப்பிரதிநிதிகளால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அதன் மூலம் பெருமளவான உதவிப்பொருட்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், தென்மராட்சி, வலிகாமம் போன்ற பிரதேசங்களில் பரவலாக நடைபெற்றுவரும் இப்பணியானது, தொடர்ந்து இடம் பெற்று வருகின்றது. சேகரிக்கப்பட்ட கல்வி சார் பொருட்கள் பாதிக்கப்பட்ட மாணவர்களிற்கு விரைவில் வழங்கப்படவிருக்கின்றது.

இப்பணியானது தொடர்ந்து இடம்பெறுவதற்கு அதிபர்கள், தனியார் கல்விநிறுவனத்தினர், மாணவர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் நாடப்பட்டுள்ளது.

சுனாமி கல்வி நிவாரணப் பணியின் செயலணியோடு இணைந்து செயலாற்ற விரும்பும் மாணவர்கள் கோவில் வீதி நல்லூரில் அமைந்திருக்கும் தமிழ் மாணவர் ஒன்றிய செயலகத்தோடு தொடர்பு கொள்ளுமாறு ஒன்றியத் தலைவர் சா.ப.குணேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# மேல் நீதிமன்ற நீதவானை அவமதித்த நால்வர் யாழ்.சிறையில் தடுத்து வைப்பு

(வடமராட்சி)

மட்டக்களப்பு மேல்நீதிமன்ற நீதவானைஅவமதிக்கும் வகையில் செயற்பட்டதாகக் குற்றஞ்சாட்டி யாழ்.நகரப்பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட நான்கு இளைஞர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை இந்நான்கு இளைஞர்களதும் கைவிரல் அடையாளங்களைப் பெற்று ஏற்கனவே குற்றச் செயல்களுடன் இவர்கள் தொடர்புடையவர்களா என்பதனைக் கண்டறிய நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்.நீதவான் பணித்துள்ளார். இது தொடர்பான அறிக்கை கொழும்பிலிருந்து கிடைக்கும்வரை இச் சந்தேகநபர்களை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்; மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதவான் சுப்பிரமணியம் பரமராஜா விடுமுறையில் யாழ் வருகைதந்துள்ளார். சொந்த அலுவல் காரணமாக நகரப் பகுதிக்குச் சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை இரண்டு உந்துருளியில் வந்த குறித்த நான்கு இளைஞர்களும் மேல் நீதிமன்ற நீதவானை அவமதிக்கும் வகையில் செயற்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இதையடுத்து செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து குறித்த நான்கு இளைஞர்களும் பொலிசாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட வேளையிலேயே விளக்க மறியலில் வைப்பதற்கான உத்தரவை நீதவான் இ.த.விக்கினராஜா பிறப்பித்துள்ளார். (27)

# இதுவரையில் இழப்பின் மதிப்பீடு 15ஆயிரம் கோடி ரூபாவென மதிப்பீடு

சுனாமி பேரலை அனர்த்தத்தில் இலங்கையில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் மத்திய வங்கி மதிப்பீட்டு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதுவரை பெறப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 15 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான சொத்து இழப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தமது இருப்பிடங்களை இழந்துள்ளவர்களுக்கு புதிய வீடுகளை அமைப்பதற்கு இலகு தவணைக் கடன்களை வழங்க மத்திய வங்கி தீர்மானித்துள்ளதாகவும்தற்போது நடைமுறையில் உள்ள 10.6 சதவீத வட்டிக்கு பதிலாக 6 சதவீத வட்டிக்கு இந்த கடன் வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# மக்கள் குடியிருப்புக்களை அண்மித்து மணற்காட்டில் கடற்படை முகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி மணற்காட்டு கடற்கரையோரத்திலிருந்த சிறிலங்காக் கடற்படைமுகாம் ஒன்று சுனாமி பேரலையினால் அடித்துச் செல்லப்பட்டதையடுத்து கடற் கரைக்கு சற்றுத் தொலைவில் உள்ள மணல்மேட்டுப் பகுதியில் புதியதொருபடை முகாம் ஒன்றை அமைக்கும்முயற்சியில் சிறிலங்காக் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இப்புதியமுகாம் அமைப்பிற்காக பல்வேறு பகுதிகளிலிருந்தும் பனைமரக்குற்றிகளை இராணுவ வாகனங்கள் மூலம் ஏற்றி வந்து கடற்படையினர் முகாம் அமைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

மக்கள் குடிமனையை அண்மித்து இம்முகாம் அமைக்கப்படுவது அப்பகுதி மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிக்குமென அஞ்சப்படுகிறது. (33)

# ஒலிப்பதிவுத் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி

முன்னைய கிராமபோன் இசைத்தட்டு முதல் தற்போதைய CD இசைத் தட்டுவரை ஒலிகளைப் பதிவு செய்யும்முறையில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன.

அதன்படி முதன் முதல் ஒலிப் பதிவு செய்யப்பட்டது 1877 ஆம் ஆண்டில் ஆகும். இதனை தோமஸ் அல்வா எடிசன் என்பவர் கண்டுபிடித்தார். அது வெள் ளீயத்தாலான தகடு ஆகும். இதில் அவர் "மேரிஒருசிறிய ஆட்டுக் குட்டி வைத் திருந்தாள்" என்று பதிவு செய்யப் பட்டது.அதனை அவர் மேலும் விருத்தி செய்து 2நிமிடங்களுக்கான ஒலிப்பதிவுத் தட்டாக மாற்றினார். 1880ஆம் ஆண்டில் அது மேலும் மாற்ற மடைந்து மெருகிடப்பட்டு மின் கலத்தின் உதவியுடன் இயக்கப் பட்டது. பின்னர் 1887 ஆம் ஆண்டு எமீலி பெர்லினர் என்பவர் ஏழு சதுர அங்குலப் பரப்புள்ள மெழுகி னாலும் செப்பினாலுமான ஒலிப்பதிவுத் தட்டை உருவாக்கினார். இவரும் இரண்டு நிமிட நேரத்தில் ஓடி முடிக்கக் கூடிய இசைத்தட்டையே உரு வாக்கினாலும் அப்போது மக்களிடையே பெரும் வர வேற்பைப் பெற்றது.



அதன் பின்னர் 1896 ஆம் ஆண்டு நன்கு விருத்தியான இசைத் தட்டொ ன்றை எல்ட்ரி ஜோன்சன் என்பவர் உருவாக் கினார். அவர் எமில் பெர்லினின் ஆக் கத்தை ஒன்றி ணைத்து விக்டர் பேசும் நிறுவனத்தை ஆரம் பித்தார். அந்த நிறுவனம் வெளியிட்ட ஒலிப்பதிவுக் கருவிகளிலேயே நாயின் உருவம் பொறிக்கப்பட்டு அது பின்னர் வியாபாரச் சின்ன மாகியது.

இந்த ஒலிப்பதிவின் வளர்ச்சி துரித வேகத்தில் விருத்தியடைந்து 1900ஆம் ஆண்டு உறுதியான பத்து நிமிடங்கள் ஓடி முடிக்கக் கூடிய இசைத்தட்டாக மாறியது. பின்னர் 1925ஆம் ஆண்டு மின் சாரத்தின் உதவியுடன் இயங்கக் கூடிய மேலும் நன்கு விருத்தியடைந்த ஒலிப்பதிவு இசைத் தட்டுக்கள் வெளியாகின. இவை தெளிவான முறையில் ஒலிப்பதிவு செய்து கொள்ளக்கூடியதாக அமை ந்தது.

1930 ஆம் ஆண்டு அனைவராலும் கவரப்பட்ட ஒலிப்பதிவு நாடாவை ஜேர்மன் நாடு அறிமுகப் படுத்தியது. இதுஇரண்டாம் உலகப் போர் வரை அமெரிக்காவை பாதிக்காது இருந்தது. ஆயினும் 1950 ஆம் ஆண்டு ஒலிப்பதிவுநாடா மூலம் இயக்கப்படும் ஒலிப்பதிவு கருவிகளையே மக்கள் பெரிதும் விரும்பினர் 1949 ஆம் ஆண்டில் ஒலிப்பதிவு தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட போட்டி காரணமாக 45 அங்குல சுற்றளவும் 7 சதுரஅங்குலப் பரப்பளவையும் உடைய இசைத் தட்டு அறிமுகப் படுத்தப் பட்டது. இதன் பின்னர் கொலம்பியா என பெயர் பெற்ற 12 சதுர அங்குலப் பரப்பளவும் 33.33அங்குலச் சுற்றள வையும் கொண்ட இசைத்தட்டு அறிமுகமானது.

1951ஆம் ஆண்டு வேண்டிய இடங்களுக்குக் கொண்டு செல்லக் கூடிய ஒலிப்பதிவுக் கருவியை சுவிற்சர்லாந்து நாடு கண்டு பிடித்தது. இக் கருவியிலேயே பொருத்தப் பட்ட இறுவெட்டுக்களைக் கொண்ட நவீன ஒலிப்பதிவு அறி முகப் படுத்தப்பட்டது. அந்த வருடம் ஜேர்மனியும் ஒரு ஒலிப் பதிவுக் கருவியை அறிமுகப் படுத்தியது.


1963ஆம் ஆண்டு முதலாவது சிறிய கச்சிதமான ஒலிப் பதிவுக் கருவி அறிமுகப் படுத்தப்பட்டது. இவை புகைப்பட அல்பங்களின் விற்பனை யையும் முறியடித்தன. பின்னர் கார்களில் பொருத்தக்கூடிய வகையிலான ஒலிப்பதிவுக் கருவிகள் 1965 இல் அறி முகமாகின. 1979 ஆம் ஆண்டு சொனி நிறுவனம் செல்லிட ஒலிப்பதிவுக் கருவியை(WALK MAN. CAZZETLE) அறிமுகப் படுத்தியது இவற்றுடன் இணைத்து ஹெட் (HEADPHONE) போனும்வழங்கப் பட்டது.அவை இன்றும் தயாரிப்பில் உள்ளன. 1982 இல் உடனடியாக பிரபல்யமாகி விட்டாலும் முதலாவது டிஜிடல் ஒலிப்பதிவுக் கருவி ஜப்பானிய சந்தைகளில் விற்பனைக்கு வந்தன.


1998 ஆம் ஆண்டு MP 3என்ற ஓடியோ ஒலிப்பதிவு நாடாவை வெளியிட்ட ஜேர் மனிய நிறுவனம் ஒன்று அது தொடர்பாக எழுந்த பல கண்டனங்களினால் நேற்றைய மழைக்குப் பூத்தகாளான் களைப் போன்று மறைந்து விட்டன. 2001ஆம் ஆண்டு APPLECOMPUTER நிறுவனம், அறிமுகம் செய்த MP 3 ஒலிப் பதிவு நாடாவில் 1000 பாடல்களை ஒலிப்பதிவு செய்யலாம். இதற்குப் பெரும் வரவேற்புக் கிடைத்தது. சுமார் ஒரு மில்லியன் நாடாக்கள் 2 வருடங்களில் விற்பனை செய்யப்பட்டன. 2004வரை99 வீதம் விற்பனை செய்யப்பட்டிருப்பதாக APPLE நிறுவனம் தெரிவித்துள்ளது.



படத்தில் காணப்படுவது செல்லிட தொலைபேசியா யினும் தனியாக, பொழுது போக்குகள் இல்லாதபோது பாடல்களைக் கேட்கக் கூடிய ஒரு ஒலிப்பதிவு கருவியு மாகும். தென் கொரிய நிறுவனத்தால் புதிதாகத் தயாரிக்கப்பட்டது. இதன் பெறுமதி 360 அமெரிக்க டொலர்களாகும்.

# நில நடுக்கத்தால் ஏற்பட்ட சுனாமி கடலலை




## நிலநடுக்கத்தால் சுமத்திரா தீவு 36 மீற்றர் தென்மேற்காக நகர்ந்துள்ளது

ஆசியப் பிராந்தியத்தில் கடலின் நடுவில் கடந்த 26 ஆம் திகதி இடம் பெற்ற பூமியதிர்ச்சி காரணமாக கரைநோக்கிப் பாய்ந்து பெரும் அனர்த் தங்களை ஏற்படுத்திய கடலலைகள் நிலையாக அமைந் திருந்த நாடுகளின் நிலப் பரப்பிலும் - உலக வரை படத்தில் ஆசியப் பிராந்திய நாடுகளின் அமைவிலும் மாற் றத்தை ஏற்படுத் துமளவுக்கு பலம்வாய்ந் தவையாக அமைந்து விட்டன என அமெரிக்காவின் பிரபல பௌதிகப் புவியியல் விஞ் ஞானியான ஹென்ஹட்கட் தெரி வித்துள்ளார். 9 ரிக்டர் அளவு பாரிய தாக்கத்தை ஏற்படுத் தவல்ல இந்தப்பூமியதிர்ச்சி சுமத்திராவின் தென்கிழக்கு மூலையின் 250 கிலோ மீற்றர் அளவுக்கு பாதிப்பை ஏற் படுத்தியிருப்பதோடு, அதனைச் சூழவுள்ள சிறுதீவுகள் அமைந் திருந் த நில அமைப் பை20 மீற்றர்தூரத் திற்கு அப்பால் 66 அடி தள்ளி வைத் துள் ளதாக வும் அவர் தெரி வித் துள் ளார்.

இந்தோனேசியாவின் வட மேல் ஆ னை ய ா ன சுமத்திராத் தீவும் 36 மீற்றர் தூரம் அதன் முன்னைய அமைவிலிருந்து தென்மேற்குத் திசைக்குத் தள்ளப் பட்டுள்ளது.

அமெரிக்க புவியதிர்வுத் தகவல்மையத்தின் பௌதிகப் புவியியல் விஞ்ஞானியான ஸ்ரு வர்ட்சிப்கின் என்பவரும் இக் கருத்தை ஏற்றுள்ளார். சுமத்தி ராதீவு இவ்விதம் அமைப்பு ரீதியில் நகர்த்தப்பட்டிருப்பது மட்டு மன்றி அதனது முன்னைய கடல் மட்டம் மேலு யர்ந் துள்ளதாகவும் அவர் தெரிவித் துள்ளார்.

இந்தியா மற்றும் பர்மா ஆகிய நாடுகளின் கடல் மட்டமும் முன்னரைவிட உயர்ந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக இந்தோனேசியத் தீவுகளின் நில அமைவிலும் மாறு தல்கள்ஏற்பட்டுள்ளன. கடற் பெருக்கத்தின் இத்தகைய விளைவுகள் விரைவில் உலக வரை படத்திலும் மாற்றத்தை ஏற் படுத்தும்என்று தெரிவித் துள்ளனர்.

## தெற்கில் அகதி முகாம்களிலுள்ள சிறுவர்கள் கடத்தப்பட்டு

## வேலைக்கமர்த்தப்பட்டுள்ளது கண்டுபிடிப்பு

(கொழும்பு)

**சுனாமி அலை பேரழிவினால் பெற்றோர்களை இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்திருக்கும் சிறுவர் சிறுமியர்களை உறவினர்கள் என்று கூறிக்கொண்டு சிலர் தங்களது வீட்டு வேலைகளுக்கு கூட்டிச் சென்றுள்ள சம்பவங்கள் தென்பகுதியில் இடம்பெற்றுள்ளன.**

இதனையடுத்து அகதிகளாக முகாமில் இருக்கும் சிறுவர், சிறுமியர்களை அவர்களின் உறவினர்களின் அனுமதி அல்லது முகாம் பொறுப்பதிகாரிகளின் அனுமதியில்லாமல் கூட்டிச் செல்ல முடியாதென அரசு அறிவித்துள்ளது.

ஹிக்கடுவ, பட்டபொல, மெடிவல போன்ற இடங்களில் இச்சம்பவங்கள் நடந்துள்ளதெனவும், தற்பொழுது இச்சிறுவர்கள் தங்கிய வீடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக அறிக்கைகள் வெளிவந்துள்ளன.

## சுனாமியால் பலியான மக்களுக்கு ஐரோப்பாவில் 3 நிமிட மௌன அஞ்சலி

(வத்திக்கான்)

சுனாமி பேரலையின் கோரத்தாண்டவத்தின்போது பலியான அனைத்து மக்களுக்கும் ஐரோப்பிய நாடுகள் மூன்று நிமிட மௌன அஞ்சலி செலுத்தியுள்ளன.

தென்னாசிய நாடுகளில் கடந்த இருபத்தாறாம் திகதி ஏற்பட்ட இந்த அனர்த்தத்தினால் பலியான ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்திற்கும் அதிகமான மக்களுக்கு இரங்கல் தெரிவித்து போப் இரண்டாம் ஜோன்பால் தலைமையில் வத்திக்கான் நகரில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஏராளமானோர் அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது சுவீடன் நாட்டில் அஞ்சலி செலுத்தப்பட்ட நேரத்தில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. அதே சமயம் ஜேர்மன் தலைநகரில் பாராளுமன்றக் கூட்டத்தில் அந்நாட்டு தேசியக்கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டது.

அயர்லாந்திலுள்ள மிகப் பெரிய வணிக வளாகங்களில் ஊழியர்களுடன் வாடிக்கையாளர்களும் மௌன அஞ்சலி செலுத்தினர்.

இது போன்று பெல்ஜியம், இங்கிலாந்து, நெதர்லாந்து போன்ற அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் ஒரே நேரத்தில் இந்த மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் வடக்கு கிழக்கிற்கு விஜயம்

கனடா ரொரன்ரோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் ஜிம் கரியானிஸ் நாளை மறுதினம் இலங்கை வருகிறார். 11ம் திகதி கிழக்கு மாகாணத்திற்கும், 12ம் திகதி வடக்கிற்கும், குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் விஜயம் செய்யவுள்ளார்.

கிரேக்க நாட்டிலிருந்து சிறு வயதில் அகதியாக கனடாவிற்குள் நுழைந்து தற்போது லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகவுள்ள ஜிம் கரியானிஸ், கனேடியத் தமிழ் மக்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருபவர். ரொரன்ரோ பெரும்பாகத்தில் வாழும் பல்லின பல்கலாச்சார மக்களுடன் இணைந்து நடப்பதுடன், பலவித உதவிகளையும் வழங்கிவரும் இவர், வடக்கு கிழக்கில் நிவாரணப் பணிகள் நேர்மையாக முன்னெடுக்கப்பட சிறிலங்கா அரசு உதவுகிறதா என்பதை ஆராயவே தனது பயணத்தை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. கனடா ரொரன்ரோ மாநிலத்தில் வாழும் தமிழர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே இந்த விஜயத்தை மேற்கொள்கின்றார். இதற்கிடையில், கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரமுகர்களும் அடங்கிய பிறிதொரு குழு விரைவில் இலங்கை சென்று நிலைமைகளை நேரில் ஆராயவுள்ளதாகத் தெரியவருகிறது.

## கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்குட்பட்ட பகுதிகளில் கட்டடம் அமைக்கத் தடை

### சிறிலங்கா அரசு அறிவிப்பு

(கொழும்பு)

கடற்கரையில் இருந்து முந்நூறு மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள சேதமடைந்த கட்டடங்களை அதேபகுதியில் மீளக்கட்டி எழுப்புவதற்கு அரசு தடை விதித்துள்ளது.

கடற்கரையை அண்டிய பகுதிகளில் உள்ள சேதமடைந்த கட்டடங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுமெனவும், அப்பகுதியில் மீளக் கட்டடங்களை அமைப்பவர்களுக்கு எதிராகக்கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கடற்கரைப்பகுதிகளில் சேதமடைந்த கட்டடங்களை அனுமதியின்றி மீண்டும் கட்டுவதற்கு முழுமையாகத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாகவும் , அனுமதி இன்றிக் கட்டடங்களைக் கட்டுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிசாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட அரச ஊழியருக்கு 12 மாத சம்பளம் வட்டியில்லாக் கடனாக வழங்க முடிவு

சுனாமி பேரலையால் பாதிப்புக்குள்ளான அரச ஊழியர்களுக்கு அவர்களின் பன்னிரெண்டு மாத சம்பளம் வட்டி இல்லாத கடனாக வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.இது தொடர்பான அறிவித்தலை அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர வெளியிட்டார்.இதற்காக முதற்கட்டமாக நூறு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இக்கொடுப்பனவு வரும் ஏப்ரல் மாதத்திற்கு முன்னர் வழங்கப்படுமெனவும் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.இதேவேளை இதனால் இடம் பெயர்ந்த மக்களுக்கு மூன்று மாதகால உலர் உணவு முத்திரை வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்கள் வழங்கியவர்கள் விபரம்

தமிழர் புனர்வாழ்வுக்கழகம்-வவுனியா, நல்லாயன் இல்லம்-வவுனியா, மல்லாவி தனியார் பேருந்து சங்கம்,குருநகர் சென் ஜோன்ஸ் சனசமூக நிலையம்-யாழ் மைய றொற்றிக் கழகம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கோண்டாவில் சன சமூக நிலையம் -யாழ் மைய றொற்றிக், தமிழர் புனர்வாழ்வுக்கழகம்- கிளிநொச்சி, கல்மடு நகர்- வட்டக்கச்சி பொதுமக்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்-புதுக்குடியிருப்பு, அரசாங்க வைத்திய சாலை- மல்லாவி, தென்னிந்திய திருச்சபை -வட்டுக்கோட்டை, வவுனியா வடக்கு ப.நோ.கூ.ச.-அரசசார்பற்ற நிறுவனம், சர்வதேச கெயர் நிறுவனம், செஞ்சிலுவைச்ங்கம் -வவுனியா, யுனிசெவ் நிறுவனம், மக்கள் வங்கி- வவுனியா,போரூட், புனர்வாழ்வு அமைச்சு, போரூட் வவுனியா-முல்லைத்தீவு, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்-வவுனியா, குப்பிளான் மக்கள், அகதிகளுக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, மன்னார் மறை மாவட்ட ஆயர் ஊடாக மீனவர் சங்க மக்கள், வடலியடைப்பு பண்டத்தரிப்பு மக்கள், துணுக்காய் தமிழர் புனர்வாழ்வுக்கழகம், வவுனியா மாவட் ஒருங்கிணைப்புக் கழகம், புன்னாலைக்கட்டுவான் ஈவினை சனசமூக நிலையம், நிலா சனசமூக நிலையம்- உடுவில்தெற்கு சாந்தியபுரம் சுன்னாகம்,யு.என்.எச்.சி.ஆர், தினக்குரல், மாத்தளை முத்துமாரியம்மன் கோயில், வவுனியா அரச அதிபர், உடுகொடவத்த உணவுச்சாலை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், நானாட்டான் பிரதேசசபை, நுவரெலியா மாவட்ட பசுமலைக்கடைவீதி அக்கரைப்பத்தானை, கண்டி மாவட்டம் ஜெயக்குமாரும் நண்பர்களும், மொரட்டுவ பல்கலைக்கழகம், பிரதேச செயலகம் வவுனியா, பிரதேச மகளிர் அபிவிருத்தி சமாசம் வவுனியா, சோபா நிறுவனம், சி.க.கூ சமாசம்முல்லை மாவட்டம், நெஸ்பிறே கொம்பனி அம்மன் களஞ்சியம் வவுனியா ஊடாக, பாஜ் நிறுவனம், புலிகளின் மருத்துவப்பிரிவு, சுகாதாரப் பிரிவு வவுனியா, தமிழ் இளையோர் அமைப்பு, கொழும்பு வைத்தியர், ரஷ்யன் பல்கலைக்கழகம், வவுனியா எம்.ஓ.எச், பங்குத்தந்தை பாசையூர், உலக உணவு ஸ்தாபனம், எம். ஜெயப்பிரதாப் குடும்பத்தினர் வவுனியா, தமிழ் ஆசிரியர் சங்கம் புத்தளம் மாவட்டம், ஏ.எம்.டி.ஏ நிறுவனம், அம்மன் ஜுவல்ஸ் இன், வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு, மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வுச்சங்கம், அன்னை திரேசா சகோதரிகள் கோப்பாய், சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம், மீசாலை வர்த்தக சங்கம் பொதுமக்கள், சமூக சேவைகள் திணைக்களம், சேவாலங்கா வவுனியா, இடைக்காடு வாழ் மக்கள், ரூபவாஹினி, சக்தி/சிரச எவ்.எம், ஹட்டன் வாழ் மக்கள், ஒக்ஸ்பாம், ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகம், ஜனசக்தி சனசமூக நிலையம் நல்லூர்.

### நிதி உதவி செய்தவர்கள்

பரமநாதன் புஸ்பமலர், இரவீந்திரராஜ் லண்டன், மைக் வாட்னோவும் நண்பர்களும், ஜெபநேசர் செப ஆலயம், தங்கராசா, பாலசுப்பிரமணியம், முள்ளியவளை விசுவமடு அழகக சங்கம், வன்னிவிளாங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம்.

ராஜன் ஏஜென்சி- கொழும்பு, அருண் சிற்றி கொழும்பு, இலங்கை தொழிலாளர் காங்கிரசும்- நோவூட் பக்தர்களும், புஸ்பநாதன் -முல்லைத்தீவு அம்பகமம் அருள்மிகு மம்மி பிள்ளையார் ஆலய பரிபாலனசபை, மாத்தளை புதிய ஒளி சுற்றாடல் கழகம், பலாலி நண்பர்கள், பிரதம மந்திரி அலுவலகம்-கொழும்பு, கொட்டகல எல்ரேட்(கிறீஸ் பஸ் நுவரெலியா), வாகன உதிரிப்பாக விற்பனையாளர் சங்கம்-கொழும்பு, வீதி அபிவிருத்தி அதிகார சபை-வவுனியா, புத்தளம் கருமாரி அம்மன் ஆலயம்,றாம் மளதேஸ்,கணேஸ் ரெக்ஸ் ரைல்,றஞ்சனாஸ் ரோர்,லலிதா, ரேட்சென்ரர்-கொழும்பு,புடவை வர்த்தகர் சங்கம், மேல்மாகாண மக்கள் முன்னணி தலைவர் வர்த்தக கழகம், நாயக்கர் சேவை-மாம்புரி புத்தளம், கள்ளியடி கற்பக வினாயகர், இந்து இளைஞர் மன்றம்-நீர்கொழும்பு,PARIS SITOWMAN, யுனிசெவ், சக்தி-சிரச,லயன் பியர்-நுவரெலியா, அனுராதபுர மக்கள், குருநகர், மிலான் ரேடஸ் கொழும்பு சங்கம்,கிமாலயா பிஸ்கட் கொம்பனியும், கண்டி மக்களும் வேங்கை ராதா படையணிப் போராளி, சாமிமலை மடநொடி வாழ் மக்கள், இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனம், M.விக்டர்லால்- சிலாபம், லியோ கழகம்- கொழும்பு, முரளிதரன்-கொழும்பு, சித்திவினாயகர் வி.க-மன்னார், தோட்ட வீடமைப்பு உட்கட்ட அமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பு, திரவுபதி அம்மன் ஆலயம்-முந்தல்,இந்து ஆலய பரிபாலனசபை- உடப்பு பொது மக்கள், பி.மாச்சனர் (லண்டன்),தோட்ட மக்கள்-சன்றைக்ஸ் வி.கழகம், இளைஞர் மன்றம், நோர்வுட் நுவரெலியா, பரமநாதன் புஸ்பமலர்-வவுனியா, இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கலை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் -மாத்தளை, தமிழ் பொதுமக்கள்-மாத்தளை, மேலதிக அரச அதிபர் வவுனியா, மட்டக்கல தோட்டம்-தலவாக்கலை மக்கள், மிருக வைத்திய சுகாதார திணைக்களம்- கண்டி, மாஸ்ரஸ் அம்டிரஸ் பி.லிமிட்டட்-கேகாலை, சர்வஷஸ்ரிக்கும் சுவிஷேச தாபகம்-வவுனியா, ஸ்ரீ றஞ்சன்,கண்ணன்-சாவகச்சேரி, பிறைட்சன் நிலையம்- சாவகச்சேரி, வேல்ட் விஷன், மிட்றவுன் லான்ஸ் கழகம்-கொழும்பு, வசீகரன் குணரெட்ணம், சுந்தர், மோகன்-திருகோணமலை, சங்கானை வர்த்தகர் சங்கம், பேசாலை மக்கள், பொறள்ள மக்கள், செல்வராஜா-மானிப்பாய், சிவராஜா, கனகரட்ணம், செல்வராசா-கொழும்பு-15, இ.போ.ச கோண்டாவில், மோகன் வீடியோ விஷன், ஹான உதயா அக்கடமி-சாவகச்சேரி, இந்துக் கல்லூரி-மம்பலப்பிட்டி, அழகுமணி அமிர்த சங்கம்- முள்ளிவாய்க்கால், மொறட்டுவ சர்வோதயம்,மக்கள் தேவசபை-கொழும்பு-05,வடபத்திரகாளி அம்மன் ஆலயம், கியூடெக் நிறுவனம்-கிளிநொச்சி, சக்தி F.M.யாழ்ப்பாணம், கெயர், வவுனியா மாவட்ட கமக்கார அமைப்புக்களும் திணைக்கள ஊழியர்களும், முத்தையா ஜயந்தினி-வவுனியா, இலங்கை மெதடிஸ்த திருச்சபை, ,உலக பல்கலைக்கழகசேவை கனடா, புனித லூர்த்துமாதா ஆலயம் குடாகம கேகாலை,லயன்ஸ் கழகம், டி.ஆர்.சி. வவுனியா,கிறீஸ்து நாதர் ஆலயம்-கண்டி, ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்- இந்துக் கலாச்சார பேரவை றோறேட் கழகம், தமிழர் நல்வாழ்வு ஒன்றியம்-நுவரெலியா, மன்னார் சுவிஷேச ஐக்கியம், கியூடெக் கிளிநொச்சி, இலங்கை தேசிய சமாதான சபை-கொழும்பு, கண்டி ஸ்ரோர்ஸ்-65 மெலின் வீதி-குருணாகல்,கதிரேசன் கோயில்-குருணாகல், தோட்ட வீடமைப்பு, உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைப்பு, டானிஸ் டிமைண்டிங்குறாப் (கண்ணிவெடி அகற்றும் பிரிவு), கேகாலை ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி தேவஸ்தானம், அரசாங்க அதிபர் பணிமனை-வவுனியா, தென்னிந்திய திருச்சபை-கிளிநொச்சி,

(ச)

# அகதிமுகாம்களை இராணுவம் பொறுப்பேற்பதற்கு தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டனம்

அகதிமுகாம்களை சிறிலங்கா இராணுவத்தினர் பொறுப்பெடுத்துள்ள செயல்குறித்து தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் தனது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இது குறித்து கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் அண்மையில் ஏற்பட்ட கடல் அனர்த்தத்தினால் அவலங்களைச் சந்தித்த பெருமளவு மக்கள் நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டு தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் உரிய முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பொறுப்பில் இருந்த நலன்புரி நிலையங்களை இராணுவத்தினரின் வசம் ஒப்படைக்கும் சிறிலங்கா அரசின் தீர்மானமானது ஏற்கனவே அல்லற்பட்டு வாழும் மக்களிடத்தில் மேலும் துன்பத்தையே ஏற்படுத்தவல்லது.

ஏற்கனவே சிறிலங்கா அரசின் கொடிய இராணுவ நடவடிக்கைகளின் வடுக்கள் ஆறுமுன்பே கடல் கொந்தளிப்பால் அவதிப்பட்ட மக்கள் மீண்டும் இராணுவத் தலையீடுகளையும் அடாவடித்தனங்களையும் சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் நடுக்குடத்தனைப் பகுதியில் அமைந்திருந்த நலன்புரி நிலையம் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டமையும், அங்கிருந்த தொண்டர்கள் தாக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சந்தர்ப்பத்தில் நலன்புரி நிலையங்களைச் சிறிலங்காப் படைகள் பொறுப்பேற்கும் பட்சத்தில் இன்னும் மக்கள் மத்தியில் விரக்தி ஏற்படும். ஏற்கனவே சிறிலங்கா அரச படைகள் மக்கள் மத்தியில் குறிப்பாக மாணவர் மத்தியில் போதைப்பழக்கவழக்கங்களையும், வக்கிர உணர்வுகளையும் உண்டாக்கும் வீடியோ நாடாக்களையும் விநியோகித்து வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு இருந்து வரும் நிலையில் இராணுவத்தினர் நலன்புரி நிலையங்களைப் பொறுப்பேற்க முற்படின் இன்னும் பாரியபிரச்சினைகளை உண்டுபண்ணும்.

ஏற்கனவே கடல்அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் அவசர உதவிகளை எதிர்பார்த்து நிற்கும் இந்நிலையில் இராணுவத்தினர் நலன்புரிநிலையங்களைப் பொறுப்பேற்க முற்படின் அது பாரிய விளைவுகளைக் கொண்டு வரும் என எச்சரிக்கின்றோம். அரசியல் இலாபம் தேடி மேற்கொள்ளும் இந்த நடவடிக்கையை உடன் கைவிடுமாறு வேண்டுவதோடு மீறிச் செயற்படின் பரந்தளவில் மக்கள் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டு இதனை எதிர்ப்பர் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் அரசின் இந் நடவடிக்கை தமிழ்மக்கள் மீது அரசு கொண்டுள்ள கரிசனையினால் மேற்கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையன்று. வெறுமனே சர்வதேசத்திற்குத் தாம் தமிழ்மக்கள் மீது அக்கறை கொண்டிருப்பதாக காட்டி சர்வதேச உதவிகளைப் பெற்று மீண்டும் தமிழ் மக்கள் மீது ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையே மேற்கொள்ளவுள்ளது. இன்று வரை அரசின் நேரடியான எந்த உதவிகளும் கடலனர்த்தத்தினால் அல்லற்படும் எம் மக்களை வந்தடையவில்லை. இன்று வரை சகல வழிகளிலும் எமது மக்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினரே இங்குள்ள பொது அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்னும் பல அமைப்புகளிடமிருந்தும் உதவிகளைப் பெற்று உடனடி மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். இந் நிலையில் பராமரிப்பு நிலையங்களை திடீரென முப்படைகளின் தளபதியிடம் சனாதிபதி கையளித்திருப்பது எமக்கு மிகுந்த ஆச்சரியத்தையும், ஐயத்தையும் தோற்றுவிக்கின்றது. எனவே அரசு உடனடியாக இந்த முடிவை மறுபரிசீலனை செய்யவேண்டும். ஒரு போதும் இராணுவத்தினர் எமது மக்களின் நலன்புரி நிலையங்களுக்கு பொறுப்பாக இருப்பதை மக்களாகிய நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்பதை இராணுவத்தளபதிகளும், சனாதிபதியும் உணர்ந்து கொள்ள வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (36)

# அம்பாறையில் அடைமழை அகதிமுகாம் மக்கள் பாதிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கடற்புவி நடுக்கத்தினால் மோசமான அழிவுகளைச் சந்தித்துள்ள அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில் பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்கள் தற்போது பெய்து வரும் அடை மழை காரணமாக வெள்ளப் பாதிப்புக்களையும் எதிர் நோக்கியுள்ளன.

பொத்துவில் பிரதேசத்தின் கோமாரி கிராமத்தின் மக்கள் குடியிருப்புக்கள், பாடசாலை, அரசினர் வைத்தியசாலை, தேவாலயம், முருகன் ஆலயம் உட்பட அனைத்துமே தரைமட்டமாகியுள்ளன. திருக்கோவில் பிரதேசத்தில் மட்டும் 16 நலன்புரி நிலையங்களில் 19730 மக்கள் தங்கியுள்ளனர். அனர்த்தத்தில் இருந்து உயிர்தப்பிப் பிழைத்த மக்களை த.பு.க தற்காலிக கூடாரங்கள் அமைத்து அதில் தங்கவைத்து பராமரித்து வருகின்றது.

இம்மக்களுக்கு உணவு,உடை, மருத்துவ சுகாதார வசதிகளை த.பு.க மேற்கொண்டு வருகின்றது. தற்போது மழை பெய்து வருவதனால் போதிய வசதிகள் அற்ற நிலையில் நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் சொல்லொணா அவலங்களை எதிர் கொண்டுள்ளனர். மக்களை நோய்த்தாக்கங்களில் இருந்தும் வெள்ள அபாயத்திலிருந்தும் பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தற்காலிக கூரை விரிப்புக்களை முதற்கட்டமாக த.பு.கழகம் 30 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது. இவற்றைப் பெற்றுக்கொண்ட குடும்பங்கள் தாண்டியடியில் உயர்நிலப்பகுதிகளில் காடுகளை வெட்டி கூடாரங்களை அமைப்பதில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு நலன்புரி நிலையங்களில் உள்ள ஏனைய குடும்பங்களையும் தற்காலிக கூடாரங்களை அமைத்து குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளையும் த.பு.கழகம் மேற்கொண்டு வருகின்றது. (சோ)

# வழிபாடு

(அலுவலக செய்தியாளர்)

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு மரணித்த மக்களுக்காகவும், இதன்காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்குமாகவும் சர்வமத வழிபாடு எதிர்வரும் 11 ஆம் திகதி குமுழமுனை புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிற்பகல் 4.00மணிமுதல் இரவு 9.00 மணி வரை நடைபெறவுள்ள மேற்படி வழிபாட்டு நிகழ்வில் கத்தோலிக்க, இந்து,இஸ்லாம், கிறிஸ்தவமதப் பெரியார்கள் கலந்து வழிபாட்டை முன்னெடுக்கவுள்ளனரென குமுழமுனை பங்குத்தந்தை அருட் திரு ச.பாஸ்கரன் அடிகள் தெரிவித்துள்ளார். (சோ)

# அக்கரைப்பற்று சின்னப்பள்ளிவாசல் மக்களுக்கு த.பு.கழகம் நிவாரணம்

(அலுவலக செய்தியாளர்)

கடற் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இனமத பேதமின்றி நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வரும் த.பு.க. அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று சின்னப் பள்ளி வாசல் முஸ்லிம் குடும்பங்களுக்கு நிவாரணப்பொருட்களை வழங்கி உதவியுள்ளது. 3.01.2005 அன்று அரிசி, சீனி, படுக்கை விரிப்பு, பால்மாவகை, உடைகள், பிளாஸ்ரிக் வாளிகள் எனக் குறிப்பிட்டளவு தொகை உதவிப்பொருட்களை அம்பாறை மாவட்ட த.பு.கழக பணிப்பாளர் பள்ளி வாசல் பிரதிநிதியிடம் வழங்கினார். இப்பொருட்கள் சின்னப்பள்ளிவாசலில் தங்கியுள்ள முஸ்லிம் குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



வட-கிழக்கு மாகாண ஆளுநர் சுனாமி பாதிப்புக்குறித்து ஆராய்வதற்காக வவுனியா மாவட்டச் .செயலகத்தில் நேற்று முன்தினம் நடத்திய கூட்டம்..

# கல்முனை நலன்புரி நிலைய மக்களுக்கு நோய்த்தாக்கம் கண்டுபிடிப்பு

கல்முனை அக்கரைப்பற்று கண்ணகிபுரம் வித்தியாலய நலன்புரி நிலையத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு கழுத்து முதுகுப்புறம் ஆகிய பகுதிகளில் ஒருவித நோய்த்தாக்கம் ஏற்பட்டுவருவதாகத் தெரியவந்துள்ளது.மேற்படி நோயினால் பாதிக்கப்பட்ட சிலர் தனிமைப்படுத்தப் பெற்று அவர்களுக்கான மருத்துவசிகிச்சைகளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினர் மேற்கொண்டு வருவதாகவும் அங்கிருந்துவரும் செய்திகள் மூலம் தெரிவந்துள்ளது. (சோ)

# புதிய கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

முன்னர் புதுக்குடியிருப்பிலும் மல்லாவியிலும் இயங்கி வந்த ரெக்கணனிப் பயிற்சி நிலையம் தற்பொழுது புதிய நவீன வசதிகளுடன் வட்டக்கச்சியில் இயங்குகிறது. இது தனது புதிய தொகுதி ஒன்றை 10.01.2005 அன்று காலை 10.00 மணிக்கு வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் ஆரம்பிக்கிறது.

**கற்கை நெறிகள்**

**MS-OFFICE**

1.INTRODUCTION TO COMPUTER
2.WINDOWS
3.MS-WORD
4.MS-EXCEL
5.MS-POWER POINT
6.MS-ACCESS

காலம்:-04 மாதங்கள்
கட்டணம்:-3000.00-தவணைமுறையில் கட்டணங்கள் செலுத்தப்படலாம்.
*.விரிவுரைகள் அனைத்தும் தமிழில் நடாத்தப்படும். வேலை செய்பவர்களுக்கு அவர்கள் விருப்பப்படி வகுப்புக்கள் நடாத்தப்படும்.
*.சிறுவர்களுக்கான வகுப்புக்களும் ஆரம்பிக்கப்படுகிறது.
01.ஆண்டு 5 தொடக்கம் 10 வரையான மாணவர்கள்.
02) 02 மாதங்கள்.
03) 700.00 மொத்தக் கட்டணம்
* இடம்:-ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி

(சி.10852)

# 5ஆம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் தமிழரசு**
**அமிர்தராஜா யுகந்தன்**

4ஆம் வட்டாரம் முள்ளியவளை

**பிறப்பு :-16.08.1975**
**வீரமரணம் :- 03.01.2000**

தகவல்:-
சகோதரன்
**அ.கபிலன்**
முள்ளியவளை

(5088)

# நன்றி கூறுகின்றோம்

அமரர்

## திருமதி ஜோர்ஜ் பிலோமினம்மா

**26.12.2004ல் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தில் ஒளி இழந்த எங்கள் குடும்ப விளக்கின் நல்லடக்கத்திற்கு உதவிசெய்த போராளிகள், பொதுமக்கள் காந்தரூபன் அறிவுச்சோலை நிர்வாகம், பிள்ளைகள், கொக்கிளாய் அ.த.க பாடசாலை ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறோம்.**

மணற்குடியிருப்பு.
முல்லைத்தீவு.

**கணவன்**
**பிள்ளைகள்,மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

(5533)



சுனாமி அலையிலிருந்து பாண்டிச்சேரியில் சிறுவன் ஒருவனை நாய்காப்பாற்றியது. அனர்த்தம் இடம்பெற்றவேளை இந்நாய் சிறுவனின் சட்டைக்கொலரை பிடித்துச் சென்று சிறிது தூரம் கொண்டு சென்று விட்டது. பின் குறித்த சிறுவன் தாயாரால் மீட்கப்பட்டார்.

# சங்கராமன் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்வரை சங்கரமடம் செல்லமாட்டேன்

## –பிணை மனுமீதான விசாரணையில் ஜெயேந்திரர்

(சென்னை)

காஞ்சிபுரம் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்வரை சங்கரமடத்திற்குச் செல்லப் போவதில்லையென சங்கராச்சாரியார் ஜெயேந்திரர் இந்திய உயர்நீதிமன்றத்தில் நேற்று உறுதி மொழி வழங்கியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து அவரது பிணை மனு மீதான தீர்ப்பை உச்ச நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது. சங்கரராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரரின் பிணைமனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஜெயேந்திரர் மேல்முறையீடு செய்துள்ளார். இம்மனுவை தலைமை நீதிபதி லகோடி தலைமையிலான அமர்வு நேற்று முன்தினம் விசாரணைக்கெடுத்துக் கொண்டது. அப்போது தலைமை நீதிபதி இக்கொலையில் ஜெயேந்திரரைத் தொடர்புபடுத்த நேரடி ஆதாரம் உள்ளதா? என தமிழக அரசு வழக்கறிஞர் கே.பி.எஸ். துளசியிடம் கேட்ட வேளை இதற்குப்பதிலளித்த அவர் சங்கரராமனை கொலைசெய்ய ஜெயேந்திரர் உள்ளிட்டவர்கள் சதித்திட்டம் தீட்டியதை நேரில் பார்த்த சாட்சிகள் உண்டெனத் தெரிவித்துள்ளார். ஜெயேந்திரர் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கூலிப்படைக்குப் பணம் கொடுத்தமை தொடர்பாக அரசு தரப்பில் முன்னுக்குப்பின் முரணாக தகவல் தருகிறார்கள் என தெரிவித்துள்ளார். இவ்வழக்கில் நேற்று இரண்டாவது நாளாக வழக்கறிஞர்கள் வாதிட்டனர். இதன் போதே பொலிசார் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் வரை அவர் சங்கரமடத்திற்குச் செல்லமாட்டார் என உறுதியளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுனாமி அலைகளால் அடித்துச் செல்லப்பட்ட சிறுவன் 10 நாட்களின் பின் உயிருடன் மீட்பு

சுனாமி அலைகளின் கோரப்பிடியிலிருந்து தன்னைக் காத்துக் கொள்வதற்காக 10 நாட்களாக ஒரு மரக்கிளையைப் பிடித்தபடியே 14 வயது தமிழக சிறுவன் உயிர்தப்பிய அதிசய சம்பவம் அந்தமான் நிக்கோபாரின் கார் நிக்கோபார் தீவில் நடைபெற்றது.

இது நம்ப முடியாத விஷயம் போல் தெரிந்தாலும் இது நடந்த உண்மை மட்டுமல்ல, அதிசயமும் கூட. தமிழ்நாட்டைச் சேர்ந்த முரளிதரன். ஏழாம் வகுப்புப் படிக்கும் இந்தச் சிறுவனின் குடும்பம் கார்நிக்கோபாரில் வசித்து வருகிறது. டிசம்பர் 26 ஆம் திகதியன்று கார்நிக்கோபார் தீவில் சுனாமி இராட்சத அலைகள் தாக்கின. இதில் முரளிதரன் அடித்துச்செல்லப்பட்டார்.

அதன் பின்னர் பத்து நாட்களாகியும் முரளிதரனைக் காணவில்லை. எனவே, அவன் சுனாமி அலைக்கு இரையாகியிருக்கலாம் என்று அவரது பெற்றோர்கள் முடிவு செய்தனர். ஆனால் அனைவரும் அதிசயப்படும் வகையில் முரளிதரன் உயிர் தப்பித்து வந்தார்.

கார்நிக்கோபார் தீவின் ஓரிடத்தில் முரளிதரன் மயங்கிய நிலையில் கிடந்ததை இராணுவ வீரர்கள் கண்டுபிடித்தனர். அவனை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அவனுக்கு உடனே குளுக்கோஸ் ஏற்றினார்கள்.

தனக்கு நேர்ந்த கதியை டாக்டர்களிடம் முரளிதரன் தெரிவித்தார். சுனாமி அலைகளால் இழுத்துச்செல்லப்படுகையில் ஒரு மரக்கிளையைப் பிடித்துத் தப்பித்ததாகவும், மரக்கிளையைப் பிடித்தபடியே இருந்ததாகவும், பயம் காரணமாக கீழே இறங்கவில்லை எனவும் அவன் தெரிவித்தார். கடைசியில் கைவலி தாங்காமல் மரக்கிளையைவிட்டு கீழே விழுந்ததாகவும் முரளிதரன் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்தே அவனை இராணுவ வீரர்கள் காப்பாற்றினர்.

10 நாட்களாகியும் உணவு, குடிநீர் இல்லாமல் முரளிதரன் உயிர் தப்பியது அதிசயம். இது மாதிரி நடப்பது மிகவும் அபூர்வம் என்று முரளிதரனுக்கு முதலில் சிகிச்சை அளித்த டாக்டர் சி.பி சாத்தயி தெரிவித்தார்.

முரளிதரனை போர்ட் பிளேயர் மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக அனுப்பிவைத்தனர். முரளிதரன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய சந்தோசமான செய்தி அவனது பெற்றோர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கலந்துரையாடல் கூட்டம் தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் சுனாமி பேரலையால் இறந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தியபோது எடுத்த படம்.


# எம்.எம்.எஸ் படகுக் கட்டுமான நிறுவனம்

M M S

## முற்று முழுதாக மூழ்கடிக்கப்பட்ட மீன்பிடித்துறைக்கு புத்துயிரூட்டல்

சுனாமி இயற்கை அனர்த்தத்தால் அழிக்கப்பட்டு சுவண்டு போயிருக்கும் மீன்பிடித்துறைக்குப் புத்துயிரூட்ட எம்.எம்.எஸ் நிறுவனத்தினராகிய நாம் முழு மூச்சுடன் செயற்படவுள்ளோம் என்பதனை, அன்பு உறவுகளையும் பெறுமதிமிக்க சொத்துக்களையும் இழந்து தவிக்கும் மீன்பிடித்துறைசார் மக்களிற்கு அன்புடன் அறியத்தருகின்றோம். யுத்த அனர்த்தத்தால் சுவண்டுபோயிருந்த மீன்பிடித்துறைக்குப் புத்துயிர் கொடுத்துப் பல படகுகளை உங்கள் கைகளில் தவழவைத்து மீன்பிடித்துறையை மீண்டும் மழலை நடைபோடவைத்த எமது நிறுவனத்திற்கு இது மீண்டும் ஒரு சவாலாக உள்ள போதிலும், நாம் இலாப நோக்கின்றி மூலப்பொருள், உற்பத்திச் செலவுடன் மட்டும் படகுகளை உற்பத்தி செய்து விநியோகிக்க முடிவெடுத்துள்ளோம். இதற்காக முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்கு ஆகிய இடங்களில் உற்பத்தி நிறுவனங்களையும் ஏனைய இடங்களில் திருத்த நிலையங்களையும் உடனடியாகத் திறக்கவுள்ளோம். இதன் ஒரு அம்சமாகப் படகு உற்பத்தியாளர்களைப் பயிற்றுவித்து வேலைவாய்ப்பு வழங்குவதிலும் ஆர்வமாகவுள்ளோம் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கும் மீன்பிடித் துறைசார்ந்த சகலருக்கும் ஆதரவுதரும் நிறுவனங்களிற்கும் அறியத்தருவதுடன் முல்லைத்தீவுக் கிளையை எதிர்வரும் 10.01.2005 அன்று ஆரம்பிக்கின்றோம் என்பதனையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். இம் முயற்சிக்கு ஆதரவு அளிக்கவிருக்கும் புலம்பெயர்வாழ் மக்களிற்கும் தார்மீக உதவிகளைச் செய்து வருகின்ற கடற்புலிகளுக்கும் எமது முற்கூட்டிய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.


நிர்வாகத்தினர்,
எம்.எம்.எஸ். நிறுவனம்,
முல்லைத்தீவு

நன்றி

(5089)

# சிட்டகொங் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி

# பலமான நிலையில் பங்களாதேஷ்!



பங்களாதேசுக்கு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள சிம்பாப்வே அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையில் நடை பெற்று வரும் முதலாவது டெஸ்ட் போட்டி யில் பங்களாதேஷ் அணி பலமான நிலை யில் உள்ளது.

சிட்டகொங்கில் நடைபெற்று வரும் மேற் படி போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப் பெடுத்தாடி 488 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் நபீஸ் இக்பால் 56 கபிபுல்பசார் 94, றாஜன்சாலே 89, காலித் மசூட் 49, முகமட்ரபீக் 69, மொட்சயா 48 ஓட் டங்களைக் குவித்து ஓட்ட எண்ணிக்கைக்கு வலுச் சேர்த்தனர்.

கபிபுல்பசார் ஆறு ஓட்டங்களால் தனது கன்னிச் சதத்தை தவறவிட்டார். பந்து வீச் சில் ம்போபூ 4 விக்கெட்டுக்களை கைப்பற் றினார்.

பதிலுக்கு தனது முதலாவது இனிங்சை ஆடும் சிம்பாப்வே நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவின் போது 4 விக்கெட்டுக்களை இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. துடுப்பாட்டத்தில் மற்சிக் கனேரி 25 ஓட்டங்களையும், மசகட்சா ஆட்ட மிழக்காது 28 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்து வீச்சில் ரபீக் இரண்டு விக்கெட்டுக் களையும், பைசியா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

## நிச்சயம் காதல் திருமணம் அல்ல

### ஹர்பஜன்சிங்



பெற்றோர் பார்த்து வைக்கும் பெண்ணையே திரு மணம் செய்து கொள்ள உள்ளேன். காதல் கிடையாது என விளக்கம் அளித் துள்ளார் இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங்.

'அந்த' பெண்ணையே திருமணம் செய்து கொள்ளப்போவதாக பத்திரிகை களில் செய்தி வெளியாகியுள்ளதே என ஒரு நிருபர் கேட்டபோது மேற்கண்ட பதிலை அளித்தார் அவர்.

அத்துடன் அந்தப் பெண்ணுடன் எனக்கு காதல் ஏதும் கிடையாது. அவ ரைத் திருமணம் செய்து கொள்ளப் போவதும் இல்லை. நண்பர்தான் அவர் எனத் தெரிவித்த ஹர்பஜன், திருமணத்துக்கு இன்னும் 3 ஆண்டுகள் ஆகும். அதுவும் பெற்றோரின் விருப்பப் படியே நடைபெறும் என்றார்.



பிரிமியர் ஹொக்கி லீக் போட்டிகள் வரும் 13இல் ஐதராபாத்தில் தொடங்குகின்றன. இதற் கான பத்திரிகையாளர்கள் சந்திப்பில் இந்திய ஹொக்கி வீரர்கள் ககன் அஜித்சிங் (வலது), கிரிக்கெட் வீரர் ஹர்பஜன்சிங் ஆகியோர் ஹொக்கி மட்டையுடன் 'போஸ்' தந்தனர்.

## சென்னை ஓபன் டென்னிஸ் பயஸ் ஜோடி அரையிறுதிக்குள்

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் இரட் டையர் பிரிவில் லியாண்டர் பயஸ் ஜோடி அரை இறுதிக்குத் தகுதி பெற்றது.

நேற்று முன்தினம் நடந்த இந்த இரட்டையர் பிரிவில் லியாண்டர் பயஸ் (இந்தியா)- ஜிமொசன் ஜிக் (செர்பியா)ஜோடி 6-2, 7-6, (9-7) என்ற நேர் செட்டில் காஸ்டென் பிராஸ்க் (ஜெர்மனி) -ராபர்ட் (சுவீடன்) ஜோடியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன் னேறியது. 3-ஆவது நாளில் நடந்த இரட் டையர் பிரிவு 2ஆவது சுற்று ஆட்டத்தில் மகேஷ்பூபதி (இந் தியா) ஜோனஸ் மிஜோர்க்மென் (சுவீ டன்) ஜோடி வெற்றி பெற்று அரையிறு திக்குத் தகுதிபெற் றது.




## 196 ஓட்டங்களினால் இங்கிலாந்துக்கு தோல்வி

## தென்னாபிரிக்காவின் தோல்விக்கு முற்றுப்புள்ளி



கேப்டவுன் டெஸ்டில் தென் ஆபிரிக்க அணி இங்கிலாந்தை 196 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இதன் மூலம் தொடர் 1-1 என்ற சம நிலையை எட்டியது. தென் ஆபிரிக்கா சென்றுள்ள இங்கிலாந்து அணி 5 டெஸ்ட் போட்டி கொண்ட தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டியில் வென்ற இங்கிலாந்து 1-0 என்ற முன்னிலை பெற்றது. இரண்டா வது டெஸ்ட் சமனானது. முக்கியமான மூன்றாவது டெஸ்டில் முதல் இனிங்சில் தென் ஆபிரிக்கா 441 மற்றும் இங்கிலாந்து 163 ஓட்டங்கள் எடுத்தன. பின்னர் தென் ஆபிரிக்கா அணி இரண்டாவது இனிங்சை 8 விக்கெட் இழப்புக்கு 222 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்தியது. இதன் மூலம் (முதல் இன்னிங்சில் 278 ஓட்டங்கள் முன்னிலை யிலிருந்தது) இங்கிலாந்து அணிக்கு 501 ஓட்டங்கள் என்ற கடின வெற்றி இலக்கை தென் ஆபிரிக்கா நிர்ணயித்தது. ஆனால், இங்கிலாந்து அணி இரண்டாவது இனிங்சில் 304 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியடைந்தது.

## அவுஸ்திரேலிய ஓபன் போட்டி கிம்கிளிஜர்ஸ் ஆடமாட்டார்



பெல்ஜிய டென்னிஸ் வீராங்கனை கிம் கிளிஜ்ஸ் மணிக்கட்டில் ஏற்பட்ட காயங் காரணமாக மெல்பேர்னில் இம்மாதம் 17ஆம் திகதி நடைபெறும் கிறான்ட் ஸ்லாம் போட்டிகளில் பங்கேற்க மாட்டார் என அறிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் அவுஸ்திரேலிய ஓபன் போட்டிகளில் இறுதிப் போட்டி வரை இவர் முன்னேறினார். ஆயினும் அக்ரோபர் மாதத்திற்குப் பின் இவர் போட்டிகளில் பங்கேற்கவில்லை. எனினும் அடுத்தமாதம் 14ஆம் திகதி "அன்ட்வெர்ப் புரோக்கிமேட் டயமன்ட் " போட்டிகளில் பங்கேற்பார்.

தற்போது அவரின் கை சுகமாகியிருப்பினும் நல்ல சுகமாகும் முன்பு மேலும் வருத்தத்தை கூட்டிக்கொள்ள விருப்பமில்லை என்று தெரிவித்தார்.

## டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை ஜாக் கலிசுக்கு முதல் இடம்



கிரிக்கெட் தரவரிசையில் ராகுல் ராவிட்டை மிஞ்சி முத லிடம் பிடித்தார் ஜாக்கலிஸ் டெஸ்ட் கிரிக்கெட் வீரர்கள் தரவரிசைப்பட்டியலை வெளி யிட்டுள்ளது ஹவுஸ்வோட் டர்- பிரைஸ் கூப்பர் நிறு வனம். இந்திய வீரர் ராகுல் ராவிட் முதலிடத்தில் இருந் தார். அவரைப் பின்னுக்குத் தள்ளி முதலிடத்துக்கு முன் னேறியுள்ளார். தென்னாபிரிக்க வீரர் ஜாக்கலிஸ்.

டெஸ்ட் கிரிக்கெட்டிற்கு மறு பிரவேசம் செய்த பிறகு (1991/92 தென்னாபிரிக்க அணியைச் சேர்ந்த ஒரு வீரர் முதலிடம் பிடிப்பது இதுவே முதல் முறை

தரவரிசை வீரர் அணி

1, ஜாக் கலிஸ் (தென்னாபிரிக்கா), 2 ராகுல் டிரா விட் (இந்தியா),3 ரிக்கிபொண்டிங் (அவுஸ்திரேலியா), 4 பிறையன் லாரா (மேற்கிந்தியதீவு), 5 டேமியன் மார்ட்டின் (அவுஸ்திரேலியா), 6 வீரேந்தர் சேவாக் (இந்தியா), 7 சச்சின் டெண்டுல்கர் (இந்தியா), 8 மேத்யூ ஹைடன் (அவுஸ்திரேலியா), 9 குமார் சங்கக்கார (இலங்கை), 10 அடம் கில்கிறிஸ்ட் (அவுஸ்திரேலியா).

லண்டனில் நடைபெற்றுவரும் கழகங்களுக் கிடையிலான உதைபந்தாட்டத்தில் மாஞ்சஸ்டர் அணியின் நிகொலஸ் அனெல்காவும் லிவர்பூல் அணியின் சமி ஹைபியாவும் மோதுகின்றனர்.



## யூனில் பாக்.செல்கிறது

யூன் மாதம் பாகிஸ்தானில் விளையாடச் செல்கிறது இந்திய கால்பந்து அணி! இந்திய அணி, பாகிஸ்தானில் தொடரில் பங்கேற்பது இதுவே முதன் முறை. பாகிஸ்தானில் விளையாட இந்திய சம்மேளனம் ஒத்துக்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் கால்பந்து சம்மேளனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் முஜாஹிதுல்லா கான் தெரிவித்துள்ளார்.


கோலாலம்பூரில் கடந்த மாதம் இரு நாடுகளின் அதிகாரிகள் கலந்துரையாடியபோது இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கார்ப்பந்தய வீரர் ஷூமாக்கரின் பாதுகாவலர் சுனாமியால் பலி

பார்முலா-1 கார்பந்தய வீரர் மைக்கேல் ஷூமாக்கரின் பாதுகாவ லர்களில் ஒருவரான புர்கார்ட் கிராமர் சுனாமி அலைத் தாக்குதலில் உயிரிழந்தது தெரிய வந்துள்ளது.

புகெட் தீவில் அவர் உயிரிழந்துள்ளதாக வெளியான பத்திரிகைச் செய்தியை ஷூமாக்கரின் செய்தித் தொடர்பாளர் சபைன் கெம் உறுதி செய்துள்ளார். கிராமருடன் அவரது 2 புதல்வர்களும் உயிரிழந்திருப்ப தாக நம்பப்படுகின்றது. இதற்கிடையே சுனாமியால் பாதிக்கப்பட்டோருக் காக நூறு கோடி ரூபாயை வழங்கினார் ஷூமாக்கர். விளையாட்டு வீரர்கள் மற்றும் சம்மேளனங்கள் இதுவரை அறிவிக்கப்பட்ட சுனாமி நிவாரணத் தொகைகளில் ஷூமாக்கர் தொகையே மிக அதிகமானது!

## 4ஆவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவோம்



கேப்ரவுனில் முடிவுற்ற இங் கிலாந்து தென்னாபிரிக்க கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து தோல் வியை சந்தித்ததையடுத்து இங் கிலாந்து அணித்தலைவர் மைக்கல் வோன் ஜோகன்ஸ்பேர்க்கில் நடைபெறும் 4ஆவது போட்டியை வென்று தொடரைக் கைப்பற்று வோம் எனத் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா இப்போட்டியில் சிறப்பாக ஆடி தமக்கு அழுத் தத்தை ஏற்படுத்தியதை ஒப்புக் கொண்ட அவர் அத்துடன் எமது அணி முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதமுடியாது என்றார்.


வோன் கடந்த போட்டிகளில் 10,15,18,10,11,20 என்ற ஓட்டங் களையே பெற்றார். எனினும் தான் அடுத்தபோட்டிகளில் ஓட்டங்களைக் குவிப்பதாகக் கூறியுள்ளார். இரண்டாவது போட்டியை வெல் லக்கூடிய சந்தர்ப்பம் இருந்தாலும் காலநிலையால் அது கை நழுவியதாக வோன் தெரிவித்தார்.

இனிவரும் போட்டிகள் இரண்டும் முக்கியமானதாக இருப் பினும் இந்த சில நாள் ஓய்வின் பின்னர் அணி புதுத் தென்புடன் ஆடும் என அணியின் பயிற்றுநர் தெரிவித்துள்ளார்.

### சச்சின் ஹர்பஜன் ஹொக்கிப் பந்தயம்

ஹைதராபாத்தில் வரும் 13ஆம் திகதி முதல் நடைபெறும் பிரீமியர் ஹொக்கி லீக் போட்டியில் பட்டம் வெல்லும் அணி குறித்து சச்சின் டெண்டுல்கரும், ஹர்பஜன் சிங்கும் பந்தயம் கட்டியுள்ளனர்.என்ன பெட்டிங் செய்துள்ளீர்கள் என உடனே நிருபர் கள் கேட்க, நான் வென்றால் "சச்சினின் ∴பெராரி காரை எடுத்துக் கொள்வேன்" என நகைச்சுவை யாகப் பதில் அளித்தார் ஹர்பஜன்.

## சிந்தனைக்கு



சமூகநீதி சரிவரப் பேணப்பட்டால் தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வரும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 08-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## மனிதாபிமான உதவி?

கடலடிப்புவி நடுக்கத்தால் உருவான பேரலைகள் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்கென பெருமளவிலான நிவாரணப்பொருட்கள் கொழும்பில் வந்து குவிந்தவண்ணமுள்ளன. இதேசமயம், இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்விற்கெனப் பெருமளவு நிதியுதவிகளும் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம் பேரலைகளினால் ஏற்பட்ட அனர்த்தத்தின் பெரும் பகுதி தமிழர்தாயகப்பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது என்பதும், அதிலும் ஒரு பகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஏற்பட்டன என்பதும் அனைவரும் அறிந்துகொண்ட தொரு விடயம்.

அது மட்டுமல்லாது இப்பேரனர்த்தம் ஏற்பட்டதைத் தொடர்ந்து விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்கா அரசாங்கத்தைவிட விரைவாகவும், நேர்த்தியாகவும் மீட்புப்பணி நடவடிக்கைகளில் ஈடுபட்டதென்பதும், இதனால் பல தரப்பினாலும் பாராட்டுதலுக்கு உள்ளாகியமையும் அறியப்பட்டதொன்றே. மற்றொரு புறத்தில் தமிழர் தாயகப்பகுதியில் நிவாரணப்பணி நடவடிக்கையில் இன,மத வேறுபாடு அற்றவகையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் செயற்பட்டது என்பதும், அரச உதவிகள் சென்றடையும் முன்னர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் உதவிகள் சென்றடைந்தன என்பதும் வெளிப்படையாக அறியப்பட்டதொன்றாகும்.

இதேசமயம், சிறிலங்கா அரசாங்கத்தின் நிவாரணப்பணிகள் மிகவும் தாமதமானதும், அரசாங்கத்தின் செயற்பாடானது ஊழல், மோசடிகளுடன் மிக்கதாகவும், இன மத வேறுபாடுகளுடன் கூடிய தாயும் இருந்ததென்பதும் ஏற்கனவே வெளிவந்திருந்த செய்திகளாகும். அது மட்டுமன்றி அரசாங்கத்தின் நிவாரண உதவிகள் சகலருக்கும் சீரான முறையிலும், சம அளவிலும் சென்றடையவில்லை என்பதும் பரவலான குற்றச்சாட்டாகும்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள், அதன் அதிகாரிகள், ஆயுதப்படைத்தரப்பினர் அனைவரிடமுமே இனவாத சிந்தனை மேலோங்கி இருப்பது வெளிப்படையானது. அத்தோடு, எவ்வாறு பெரும்பான்மை இனவாத சிங்களவரின் ஆதிக்கம் ஆட்சி அதிகாரத்தில் உள்ளதோ, அதேபோன்றே அரச நிர்வாகத்திலும் ஆயுதப் படையிலும் அவர்களின் ஆதிக்கமே உள்ளது. அதிலும் குறிப்பாக திருமலை, அம்பாறை போன்ற ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகப் பகுதியில் ஆட்சியாளர்களினால் திட்டமிட்ட ரீதியிலேயே சிங்கள அதிகாரிகளும், ஆயுதப்படைத்தரப்பினரும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் இவ் அதிகாரிகளும், ஆயுதப்படைத்தரப்பும் எவ்வேளையிலும் இனமத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட முறையில் மனிதாபிமான ரீதியில் செயற்பட மாட்டார்கள் என்பதற்குக் கடந்த கால அனுபவங்கள் மட்டுமல்ல; அண்மையில் சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகளில் இருந்தும் தெரிந்துகொள்ளமுடியும். அதாவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நிவாரணங்களை வழங்காது, பாதிக்கப்படாத சிங்களவர்களுக்குக் கூட அவர்கள் நிவாரணத்தை வழங்கியுள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் இந் நிவாரணப்பணி விடயத்தில் பெரும் மோசடிகள் இடம்பெற்றதாகவே தகவல்கள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக அரச செயலகத்திற்கு 150 பாரஊர்தி நிவாரணப் பொருட்கள் மோசடியான முறையில் விநியோகிக்கப்பட்டும், கடத்தப்பட்டும் உள்ளன என்பதை ஊர்ஜிதம் செய்யும் தகவல்கள் உள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும்.

அதாவது சிறிலங்கா ஆட்சியாளர்களினால் வரலாற்று ரீதியாகவே தமிழர் தாயகப்பகுதி அபிவிருத்திப்பணிகளில் புறக்கணிக்கப்பட்டது மட்டுமல்ல, இயற்கை அனர்த்தங்களினால் பேரழிவு ஏற்பட்ட வேளைகளில் கூட மாற்றான் தாய் மனப்பான்மையுடனேயே தமிழர் தாயகப்பகுதி நடத்தப்பட்டது. ஆகையினால் இது சுனாமி அனர்த்தத்தின் போதும் நிகழுகின்றமை என்பது ஆச்சரியத்திற்குரியதொன்றல்லத்தான்.

இத்தகையதொரு நிலையில்தான் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென வழங்கப்படும் நிவாரண உதவிகளைத்தம்மிடம் ஒப்படைக்குமாறு விடுதலைப்புலிகள் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கைக்கு சகலரும் செவிசாய்க்காது போனாலும் ஒரு சில நாடுகள் செவிசாய்த்துள்ளமை வரவேற்கத்தக்கதே.

விடுதலைப்புலிகளிடம் நேரடியாக உதவிகளை வழங்குதல் இலங்கை அரசின் இறைமைக்கு பிரதேச ஒருமைப்பாட்டிற்கு மாறான செயலெனக் கூறிக்கொள்வதும், விடுதலைப்புலிகளை அங்கீகரிப்பதாக அர்த்தம் கொள்ளப்படும் எனக் காரணம் கூறப்படுதலும் அர்த்தமற்றதாகும். இது நிவாரணப்பணியிலும் அரசியல் நடத்தும் முயற்சியாகும்.

நிவாரணப்பணிகளில் அரசியல்இல்லை எனக் கூறிக்கொள்ளும் அளவிற்கு யதார்த்த அரசியல் எமக்குப் புரியாமல் இல்லை. ஆனால், மனிதாபிமான ரீதியில் உதவி வழங்குகிறோம் எனக் கூறிக் கொண்டு, இனரீதியில் செயற்படும் அரசாங்கத்திடம் நிவாரண உதவிகளை வழங்குவது தான் விரும்பத்தகாததாகவும், விமர்சனத்திற்குரியதாகவும் உள்ளது. இச் செயலானது தெரிந்து கொண்டே செய்யும் தவறாகும். இதனை பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்குமான உதவி என்றோ மனிதாபிமான உதவி என்றோ கூறுதல் முடியாது. சிறிலங்கா அரசிற்கான உதவி அன்றி நிவாரணம் எனக்கொள்ளப்படுதலே சரியானதாகும்.

– கடற்கொந்தளிப்பில் பாதிக்கப்பட்டோர் தொடர்பில் –

# சனாதிபதியின் பொறுப்பற்ற செயலுக்கு யாழ்.பல்கலைக்கழக சமூகம் கண்டனம்

கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பாக சிறிலங்கா சனாதிபதியின் பொறுப்பற்ற செயற்பாட்டை யாழ்.பல்கலைக்கழக சமூகம் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். பல்கலைக்கழக சமூகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டின் சனாதிபதி அவர்கள் பொறுப்பற்ற விதமாகச் செயற்பட்டுக்கொண்டிருப்பது தொடர்பாக மிகுந்த அதிருப்தி அடைவதுடன் அவ்வாறான செயற்பாடுகளை வன்மையாகப் பல்கலைக்கழக சமூகமாகிய நாம் கண்டிக்கிறோம். இலங்கைத் தீவில் சுனாமி என்கின்ற கடல் கொந்தளிப்பினால் பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் இழந்ததுடன் பல கோடி பெறுமதியான சொத்துக்கள் அழிந்துள்ள நிலையில் இந்த இயற்கை அனர்த்தத்தினை அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொண்டிருக்கும் சனாதிபதி அவர்களின் செயற்பாடு எமக்கு மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

சகல பாதிக்கப்பட்ட மக்களும் பாரபட்சமற்ற வகையில் ஒன்றாக நோக்கப்படவேண்டும் என்றும், அவர்களுக்கான மனிதாபிமானப் பணிகள் நியாயமாகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் தெற்கில் கூறிக்கொண்டிருக்கும் சனாதிபதி அவர்கள் வடக்கு-கிழக்கு மக்களது விடயத்தில் பொறுப்பற்ற விதமாகவும், அரசியல் நகர்வுக்கான செயற்பாடுகளிலும் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார். அந்த வகையில்தான் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கான நிவாரணப் பணிகளை இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைத்ததும் அமைகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இராணுவத்தினால் பல்வேறுபட்ட அடக்குமுறைகளை எதிர்நோக்கியவர்கள் அந்த அடிப்படையில் இராணுவத்தின் பணிகளை மக்கள் ஏற்கப்போவதில்லை. இதன் வெளிப்பாடாகவே திருமலை மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்கள் இராணுவம் நிலைகொண்டுள்ள நலன்புரி நிலையங்களை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நிலையில் இராணுவத் தளபதிகளூடாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்வது எந்த வகையில் சாத்தியமாகப் போகின்றது.

பல்வேறு பொது அமைப்புக்களின் கட்டமைப்புக்கள் செயற்பட்டுக்கொண்டிருக்கும் எமது நாட்டில் இராணுவத் தளபதிகளிடம் நிவாரணப் பணிகளைப் பொறுப்பாக ஒப்படைத்தது வேடிக்கையாகவும், ஏற்கமுடியாத ஒன்றாகவும் உள்ளது. அத்தோடு மீண்டும் ஒரு யுத்தத்திற்கான முன்னெடுப்புக்களையே சனாதிபதி அவர்கள் மேற்கொண்டு வருகிறார்.

பெரும் அழிவிற்கு உள்ளாகியுள்ள நாட்டுமக்களை எந்த வகையில் மீட்டெடுப்பது. அவர்களது வாழ்க்கையை எந்த வகைகளில் மேம்படுத்தமுடியும் என்று சிந்திக்க வேண்டிய நாட்டின் தலைவி மேலும் தமிழ் மக்களை நசுக்குவதற்கான திட்டங்களுக்கு முலாமிட்டுக்கொண்டிருப்பது சனாதிபதியின் சிறுமைத்தனத்தையும், இனவெறியையும் புலமைப்படுத்துவதாகவே உள்ளது.

பல்வேறு உலக நாடுகள் உதவிகளை அள்ளிவழங்கிக் கொண்டிருக்கும் வேளையில் உண்மைக்குப் புறம்பான மதிப்பீடுகளையும், பொருத்தமற்ற புள்ளி விபரங்களையும், வெளியிடுவதன் மூலம் தமிழ் மக்களுக்குக்கு கிடைக்க வேண்டிய உதவிகளின் தொகையின் அளவினைக் குறைப்பதிலேயே சனாதிபதி முனைப்பாக இருக்கிறார்.

இவ்வாறான பொறுப்பற்ற செயற்பாடுகளை சனாதிபதி அவர்கள் நிறுத்துவதுடன் இயற்கை அழிவுகளை அரசியல் நகர்வுக்காகப் பயன்படுத்த எத்தனிப்பதையும் தவிர்க்குமாறும் வேண்டுகின்றோம்.

"இன மத பேதமின்றி" என்ற வார்த்தைகளை வெறுமை வார்த்தையாகப் பிரயோகிப்பதில் மட்டும் பயன்படுத்தாது செயற்பாட்டிலும் நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் வேண்டுகின்றோம். இயற்கை அனர்த்தத்தினை அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்துவதை பல்கலைக்கழக சமூகமாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (36)

# முல்லை. மக்களுக்கு வழங்கவென பொருட்களுடன் பிக்குகள் குழு வருகை

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மக்களுக்கு வழங்கவென ஒருதொகுதி உணவுப் பொருட்களுடன் பௌத்த பிக்குமார் அடங்கிய குழு இன்று வன்னிக்கு வரத் திட்டமிட்டுள்ளனர்.

வன்னி சமாதானக் குழுவின் தலைவரும், வவுனியா விகாராதிபதியுமான வணக்கத்திற்குரிய சீயம்பலகஸ்வவ விமலசார தேரோ தலைமையில் செல்லும் இக்குழுவில் 25இற்கு மேற்பட்ட தென்னிலங்கை பௌத்த பிக்குமாரும், வவுனியாவில் உள்ள இந்து மதகுருமார்களும் இணைந்து செல்லவுள்ளனர். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உட்பட சுமார் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை தாம் சேகரித்துள்ளதாக வவுனியா விகாராதிபதி தெரிவித்தார். நேரடியாக அந்த மக்களுக்கு வழங்கவே தாம் வன்னிக்கு விஜயம் செய்யவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். விடுதலைப் புலிகளுடைய கட்டுப்பாட்டுப் பிரதேசமான முல்லைத்தீவுக்கு பௌத்த பிக்குமார் குழு செல்வதற்கான ஏற்பாடுகளை வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தி.ஞானவேல் செய்துள்ளார். அங்கு பயணம் செய்யும் பௌத்த பிக்குமார் குழு பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் பார்வையிடுவார்கள்.

# கடற்கொந்தளிப்பால் கிழக்கில் 36 பாடசாலைகள் முற்றாக அழிவு

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை காரணமாக கிழக்கு மாகாணத்தில் 98 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இந்தப் பாடசாலைகளில் 36 பாடசாலைகள் முற்றாகவும் 62 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளன.

நாடெங்கிலும் 59 பாடசாலைகள் முற்றாகவும், 110 பாடசாலைகள் பகுதியாகவும் என 169 பாடசாலைகள் சேதமடைந்துள்ள போதிலும் கல்வி அமைச்சின் தகவலின் படி கிழக்கு மாகாணத்திலேயே கூடுதலான பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் 14 பாடசாலைகள் முற்றாகவும், 24 பாடசாலைகள் பகுதியாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 15 பாடசாலைகள் முற்றாகவும் 18 பாடசாலைகள் பகுதியாகவும், திருகோணமலை மாவட்டத்தில் 7 பாடசாலைகள் முற்றாகவும் 20 பாடசாலைகள் பகுதியாகவும் சேதமடைந்துள்ளதாக அந்தத் தகவல்கள் தெரிவித்துள்ளன. எதிர்வரும் திங்கட்கிழமை அரசாங்க பாடசாலைகள் இவ் வருடம் முதலாம் தவணைக்காக திறக்கப்படவுள்ளது. குறிப்பிட்ட பாடசாலைகள் சேதமடைந்திருப்பதாலும் நூற்றிற்கு மேற்பட்ட பாடசாலைகளில் அகதி முகாம்கள் இருப்பதாலும் அந்தப் பாடசாலைகள் இயங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

# முல்லை க.கூ.சங்க சமாசம் விரைவில் செயற்பட ஆரம்பிக்கும்

சுனாமி பேரலையினால் முற்றாக அழிவடைந்த முல்லை மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் மிக விரைவாக மீண்டும் தனது செயற்பாட்டில் ஈடுபடவுள்ளதாக மேற்படி சமாசத்தின் தலைவர் மரியராசா அவர்கள் தெரிவித்துள்ளார்.

1996 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினரிடமிருந்து மீட்கப்பட்டபின் அந் நகரின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்கும் பெரும்பங்காற்றி வந்த முல்லைத்தீவின் முதன்மை நிறுவனமான கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தற்போது ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் முற்றாக அழிவடைந்துள்ளது. இருப்பினும் அப்பகுதி மீனவர்களினது நலன் கருதியும் முல்லை நகரை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயற்பாட்டை மீண்டும் ஊக்குவிக்கும் முகமாகவும் முன்பு இயங்கிய அதே பகுதியில் மீண்டும் வெகு விரைவில் இயங்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# புலிகளுக்கு நேரடியாக நிவாரணப்பொருட்கள் கிடைப்பதைத் தடுக்க கடற்படை சோதனை

## –சந்திரிகா தலைமையிலான கூட்டத்தில் முடிவு

நாட்டுக்குள் வரும் சகல நிவாரணப் பொருட்களையும் விமான நிலையத்தில் விமானப்படையும், துறைமுகத்தில் கடற்படையும் சோதனையிட உத்தரவிட வேண்டும் என்று கொழும்பில் சனாதிபதி சந்திரிகா தலைமையில் கடந்த வியாழக்கிழமை நடந்த சிங்களக் கட்சித் தலைவர்களின் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசாங்கத்துக்கு தெரியாது நேரடியாக விடுதலைப் புலிகளுக்கு நிவாரணப் பொருட்களை சில அரசுசாரா அமைப்புக்கள் வழங்கியிருப்பதாக ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்ததை தொடர்ந்தே அவ்வாறு முடிவானதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளில் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கட்டமைப்பு ஒன்றை அமைத்து விடுதலைப் புலிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று யாழ் விஜயத்தின் போது எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க பேசியதாக செய்திகள் வெளிவந்துள்ளன என்றும் அங்கு பிரச்சினை கிளப்பப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் கலந்துகொண்ட ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய இதற்கு பதிலளிக்கையில் ரணில் அப்படி பேசவில்லை என்றும், ஊடகங்கள் தவறாக செய்தி வெளியிட்டுள்ளன என்றும் கூறியுள்ளார். (32)

### சர்வ...

இதற்குக் கடுமையான எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் இலங்கை இராணுவத்தினுடைய கடந்தகாலச் செயற்பாடுகளால் எங்களுடைய மக்கள் பெரும் விரக்தியும் அச்சமும் அடைந்திருக்கும் சூழலில் அவர்களே இந்தப் பணியை செய்ய முன்வருவது மக்கள் மத்தியில் ஒரு பெரிய அச்சத்தையும் பீதியையும் உருவாக்கி இருந்தது.

ஆகவே இதுவொரு மனிதாபிமானப் பணி, இந்த மனிதாபிமானப் பணியைச் செய்வது சிவில் அதிகாரிகளாக இருக்க வேண்டும்.

இலங்கை இராணுவத்தை இந்தப் பணியில் ஈடுபடுத்துவது பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும், நாங்கள் இதை அனுசரணையாளர்கள் மற்றும் சர்வதேச சமூகத்திற்கூடாகவும் வலியுறுத்தி இருக்கின்றோம்.

ஏனெனில் மீட்புப்பணிகளை இராணுவம் செய்யலாம். அந்தப் பணிகளை அவர்கள் செய்வதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

ஆனால் மக்களை இராணுவம் பராமரிப்பது அவர்களுக்கான ஏனைய மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வது போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பது போன்றவற்றைக் கண்டிப்பாக சிவில் அதிகாரிகளும் தொண்டர் அமைப்புக்களும் தான் இதற்கு உதவ வேண்டும் என்றார் அவர்.

### விடுதலைப்...

இதனால் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் கிளிநொச்சி விஜயத்தை தடுப்பதற்கு இராஜதந்திர நகர்வுகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிய வந்துள்ளது. ஐ.நா.செயலாளர் வன்னிக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டும் என பல்வேறு தரப்பினரும் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள நிகழ்ச்சிநிரலில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு ஐக்கிய நாடுகளின் செயலாளர் விஜயம் செய்வது பற்றிய விடயங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்பதுடன் சுனாமி அனர்த்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களுக்கும், முல்லைத்தீவிற்கும் இவர் பயணம் மேற்கொள்ளாமல் தவிர்க்கப்பட்டுள்ளமை பல்வேறு சந்தேகங்களை தோற்றுவித்துள்ளதாக ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக தமிழ் பிரதேசங்களில் ஏற்பட்ட பாதிப்புக்களை அரசாங்கம் திட்டமிட்ட வகையில் மூடிமறைப்பதற்கும் இதன் மூலம் சர்வதேச உதவிகள் இந்தப் பகுதிகளுக்கு கிடைப்பதைத் தடுப்பதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதை இந்த திட்டமிட்ட முயற்சிகள் எடுத்துக் காட்டுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். (32)

### முல்லை...

ஆரம்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

முக்கியமாக எமது அழிந்த பகுதிகள் மிகத்துரித கதியில் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் சொந்த இடத்தில் குடியேறி வேலைவாய்ப்பைப் பெற வழி செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் ஒரு நகருக்குத் தேவையான அனைதது வளங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. அதாவது உள்ளகக் கட்டமைப்புகள் மக்கள் குடியேற்றம் செய்யப்படும் இடம், தொழில் வாய்ப்பு, நீர்வசதி, சுகாதாரம், கல்வி, வர்த்தகம் போன்ற அனைத்து வசதிகளையும் நிறைவேற்றக்கூடிய திட்டமாகவும் அமையவேண்டும் என்று திட்டங்கள் தொகுக்கப்பட்டன.

மேலும் திட்டங்கள் வகுக்கும் போது அவை வெறுமனவே அழிந்துபோன பகுதியை மீளக் கட்டியெழுப்புதல் என்ற விடயத்தோடு இல்லாமல் எதிர்காலத்தில் இப்படியான அனர்த்தத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் திட்டங்கள் வகுக்கப்படவேண்டும் என்று கலந்துரையாடலில் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தப் புனரமைப்புப் பணிக்கான அடிப்படைத் திட்டமிடல் கலந்துரையாடலில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியல் துறைபேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக மீன்பிடித் துறைசார்ந்த விரிவுரையாளர் கலாநிதி சூசைஆனந் ஆகியோர் திட்டமிடல் பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கை தொடர்பான கருத்துரைகளை வழங்கியுள்ளனர்.

மேற்படி கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் முல்லைத்தீவு மாவட்டஅரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, வன்னி மாவட்டபாராளுமன்ற உறுப்பினர் கனகரட்ணம், சிரான் அமைப்பைச் சேர்ந்த செல்வின் ஆகியோருடன் முல்லைத்தீவுப் பகுதி உதவி அரசாங்க அதிபர்கள், வர்த்தக சங்கத்தினர் பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (கு,20)

### பொலி...

படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் இடம் பெயர்ந்த முகாம்களை படைத்தரப்பு பொறுப்பேற்றுக்கொள்வதென்ற அரசின் அறிவிப்பை அடுத்து பொலிகண்டி மற்றும் பருத்தித்துறை பகுதிகளிலுள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களில் கடமையில் ஈடுபடப்பொலிசார் நேற்றுச்சென்றிருந்தனர்.

எனினும் ஆயுதபாணிகளாக பொலிசார் கடமைக்குச் சமுகம் அளித்திருந்த நிலையில் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து இடம் பெயர்ந்த மக்களில் கணிசமானோர் முகாம்களை விட்டு வெளியேறியிருந்தனர். இந்நிலையில் நிராயுதபாணிகளாக முகாம்களுக்கு வெளியே கடமையில் ஈடுபடுவதாகப் பொலிசார் இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியினை அடுத்தே வெளியேறிய மக்கள் முகாம்களுக்கு மீளத் திரும்பியுள்ளனர்.

இவ்வாறானதோர் நிலையினில் வடமராட்சி மற்றும் தென்மராட்சிப்பகுதியில் உள்ள அனைத்து இடம் பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களும் தொடர்ந்தும் விசேட செயலணிக்குழுவின் பராமரிப்பிலேயே இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை "சுனாமி" கடற் பேரனர்த்தத்தினால் பாதிப்படைந்துள்ள யாழ்.குடாநாட்டின் கரையோரப் பகுதிமக்களின் வாழ்வை மீளக்கட்டியெழுப்பும் விவகாரத்தில் சிறிலங்காப்படைத்தரப்பு முட்டுக்கட்டையாக இருக்கக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.00 மணியளவில் யாழ்.கோவில் வீதியில் உள்ள இலங்கைப்போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் படையினருக்கும்-புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற விசேட சந்திப்பின் போதே இவ்விடயம் வலியுறுத்தப்பட்டது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.மாவட்டப்பிரதித் தலைவர் ஹான்ஸ் தலைமையில் இடம் பெற்ற இச்சந்திப்பில் புலிகள் தரப்பில் யாழ்.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையிலான குழுவினரும் யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சுனில்தென்னக்கோன் தலைமையிலான படைஅதிகாரிகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளும் கலந்து கொண்டதுடன் "சுனாமி" கடல் பேரனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்.பிரதேச மக்கள் பிரதிநிதிகளும் கலந்கொண்டனர். (27,கா,33)

### கனேடிய...

யுள்ள நிலையில் கனேடிய பிரதமரின் இலங்கை விஜயம் முக்கியத்துவம் மிக்கதாக அமைந்துள்ளது. இம்மாதம் 15ம் திகதி கனடாவில் இருந்து புறப்படும் பிரதமர் சீனா ஹொங்கொங் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயங்களை மேற் கொள்ளவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

### அமெ...

கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்துள்ளார். பல பெரும்பான்மைப் பத்திரிகையாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல கேள்விகளையும் கேட்டனர். அந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில்,

*. நீங்கள் விடுதலைப்புலிகளுடன் கதைத்தீர்களா?

இல்லை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையுடனோ அவர்களின் உறுப்பினர்களுடனோ நான் இன்னும் கலந்துரையாடவில்லை.

*.சமாதானப்பேச்சுவார்த்தையில் உங்கள் படைகளின் பங்களிப்பு,? தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கை?

இல்லை எமது படைகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக எந்த ஒரு நடவடிக்கையிலும் ஈடுபடாது,. அவர்களுக்கு எதிராக நாம் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடமாட்டோம், நாம் அதிகம் தென்னிலங்கையில் எமது நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகின்றோம். எமது புனரமைப்பு தென்னிலங்கையின் பகுதிகளை நோக்கியதாக இருக்கும், எப்படியோ எமது படைத் தளபதிகள் அவற்றை கவனிப்பர்.

சமாதானப்பேச்சு வார்த்தைகள் இலங்கையில் நோர்வேயின் உதவியுடன் தொடரும் எமது அரசு நோர்வேக்கு ஆதரவு வழங்கும்.

*.வடக்குக் கிழக்கிற்கு படைகள் செல்லுமா? விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உங்கள் படைகள் ?

வடக்குக் கிழக்குப் பகுதியில் அமெரி க்கப்படைகள் இராணுவ நகர்வுகளில் ஈடுபடாது, இராணுவ செயற்பாட்டிலும் ஈடுபடாது, மருத்துவ உதவிகளை மட்டும் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வழங்கும், மருத்துவமனைகளுக்கு மருத்துவ உதவிகளை வழங்கும் அமெரிக்கப்படைகள் வடக்குக் கிழக்கில் பாரிய செயற்திட்டங்களில் ஈடுபடாது என்றார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்; அமெரிக்கப் படைகள் இலங்கையில் நிலைகொண்டிருப்பதால் இலங்கையில் எந்த வித அரசியல் மாற்றத்தையும் கொண்டு வராது.

இதே வேளை இலங்கையின் புனர் நிர்மாணப் பணிக்கு அமெரிக்கத் துருப்பினர் உதவிபுரிய இருப்பதால் இன்று பாரிய கப்பல் ஒன்றில் உலங்குவானூர்திகள் சகிதம் இலங்கை வரவுள்ளனர். அமெரிக்கப் படையினர் இலங்கையில் எவ்வளவு காலம் இருப்பார்கள் என்பதை என்னால் எதிர்வு கூற முடியாதுள்ளது.

நாட்டில் புனரமைப்பு நடவடிக்கைகள் முடியும் வரை அமெரிக்கப் படைகள் இங்கு தங்கியிருக்கும் என்றார். நேற்று நண்பகல் முதல் 4 மணித்தியால குறுகிய விஜயம் ஒன்றை இலங்கைக்கு மேற்கொண்ட அவர் தமது விஜயத்தின் இறுதியில் கட்டுநாயக்க வான்படைத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க கடற்படை தளத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். இதன் போது கருத்துரைத்த அவர் எதிர்காலத்தில் ஏனைய பகுதிகளிலும் நிவாரணப் பணிகளில் ஈடுபடவேண்டுமா என்பதை இங்குள்ள அமெரிக்க படைகளின் கட்டளை அதிகாரியே தீர்மானிப்பார். சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக கொட்டகைகளை அமைக்க 10 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்குவதாக தெரிவித்த அவர் மேலும் 25 மில்லியன் டொலர்களை அமெரிக்கா வழங்கும் என்றும் குறிப்பிட்டார். இதேவேளை கொலின்பவல் நேற்று சனாதிபதி, வெளிநாட்டமைச்சர் மற்றும் எதிர்கட்சித் தலைவர் ரணில் விககிரமசிங்கவையும் சந்தித்தார். இதற்கு முன்னர் அவர் காலிக்கு சென்று பாதிக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டார். (33)

### கடற்...

மீன்பிடித் தொழிலை மேற்கொள்ளும் வண்ணமும் கடலுணவுகளை உண்ணலாம் அதனால் எந்தவித சுகாதாரப் பிரச்சினையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கடற் தொழிலில் ஈடுபடும் போது அமாவாசை, பௌர்ணமி தினங்களில் கடலில் இறங்காது ஏனைய நாட்களில் மேற்கொள்ளும் வண்ணமும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சுனாமி அலை தாக்கிய தினம் பௌர்ணமி நாளாக இருந்த காரணத்தால் இத்தினங்களில் வற்றுப் பெருக்கு ஏற்படக் கூடிய சூழ்நிலை அதிகம் காணப்படுவதனால் அத்தினங்களைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. என கலாநிதி சூசை ஆனந் கேட்டுக் கொண்டுள்ளார். (கு.20)

## சாவு அறிவித்தல்

### அமரர்
### சின்னப்பு - வர்ணகுலசிங்கம் [துரை]

நுணாவில் மேற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் இல.52 சேவிஸ்றோட் கனகாம்பிகைக் குளம் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட வரும் காலஞ் சென்ற சின்னப்பு - பூரணம் அவர்களின் மகனும் காமாட்சியின் கணவருமாகிய சின்னப்பு - வர்ணகுலசிங்கம் [துரை] அவர்கள் 07.01.2005 திகதி கிளிநொச்சியில் காலமானார். இவர் தர்சினி[ஆயப்பகுதி புளியங்குளம்], சாமிலா [இளம் தென்றல் வாணிபம், கிளிநொச்சி], ரோகினி, கோபிகா, ஜெயதரன், உதயசீலன், ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 08.01.2005 சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியை இரணைமடுச் சந்தி இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்
சரவணபவன்

(5537)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.